4642 M

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7.
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணு

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 5–3–50 | இதழ் 36

விஞ்ஞான வித்தகர்

★

“போர் வெறி கூடாது. அதனால் நாடும், மக்களும் நாசப்பாதைக்கே அழைத்துச் செல்லப் படுகிறார்கள் எந்த அரசாங்கமும் ராணுவம் புது ஆயுதம், போர் முறை பற்றியே பேசிக்கொண்டிருப்பது—வெறுக்கக் கூடிய ஒன்று! இதன் விளைவு பயன் தராது—படுநாசம் விளைவிக்கும்”

‘ஹைட்ரஜன்’ குண்டுபற்றி, இந்த அறிவுரையைத் தந்த விஞ்ஞானிகளின் ‘மாணிக்கம்’ இவர்.

★

ஐன்ஸ்டைன்

வினோதப் பாதை

[அரங்கண்ணல்]

"இங்கென்னவேலை அவர்களுக்கு, விரட்டு, அடி, உதை — ஆளை விடாதே, ஆபத்து. இருப்பதும் போய்விடும், எல்லாவற்றையும் இழந்து ஏமாளியாகி விடுவோம்!"

"வியாபாரம் செய்கிறார்களாம், வியாபாரம்! தெரியாதோ இவர்கள் சங்கதி. இங்கிருந்து பஞ்சைக் கொண்டுசென்று, துணியாக அனுப்புகிறார்கள். அதை, நாம் வாங்கி உடுத்துகிறோம்! சீப்பு, சோப்பு, சென்ட், இவைகளைக் கொடுத்து கொள்ளையலலவா அடிக்கிறார்கள் நமது நாட்டை!"

"டிராம்வேகம்பெனி — இம்பீரியல் பாங்கி — இதெல்லாம்யாருக்காக? நமது நன்மைக்காகவா! பொய், நம்பாதீர்கள், நம் நாட்டைச் சுரண்டிச் செல்வதற்காக அவர்கள் நடத்துபவைகளல்லவா, இவைகள்! இவைகளை விட்டுவைப்பதா, கூடாது, கொளுத்து, கொள்ளையிடு, குட்டிச்சுவராக்கு!"

"ஆட்சியில்அமர்ந்து விட்டார்கள் —நமது நிலம் கொடுக்கும் விளைச்சல, இதற்கு வரிப்பணம்—இப்படிக் கொள்ளையடிப்பதோடு கூட்டம் கூட்டமாக வேறு வந்து விட்டார்கள், கம்பெனி, கடைவியாபாரம் என்று சொல்லிக் கொண்டு!"

'கொட்டிச் செல்கிறார்களே நமது நாட்டுப் பணத்தை — நல்லவர்கள் போல நடித்துக்கொண்டு! வேண்டாமோ வெட்கம் இந்த வேதனையைக்காண! வீணே உறங்குகிறீர்களே, விழியுங்கள், எழுங்கள், தாய் நாட்டைக் காப்பாற்றுங்கள்!"

"ஊராரொருவன் தோட்டத்திலே ஒருவன் போட்டது வெள்ளரிக்காய். அதைக் காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி கட்டளைப் பிறப்பிக்க—யார் இவர்கள்? — கவலைப்பட வேண்டாமோ, கண்டும் தூங்குகிறீர்களே அன்னையின் காலிலோ விலங்குகள்! —வாரீர்! விரட்டுவோம், மூட்டை முடிச்சுகூட இல்லாமல் ஓடும்படி விரட்டியடிப்போம்!" கொள்ளைகள் நடைபெற்றன பல இடங்களில், பல பாங்குகள் தாக்கப்பட்டன, பல டிராம்கார்கள் நடு வீதியில் பட்டப் பகலில சுட்டெரிக்கப்பட்டன. கலவரம், கலாட்டா, கிளர்ச்சி! ஒழிக அன்னியராட்சி, அழிக வெளிநாட்டான் சுரண்டல் என்ற எழுச்சி முழக்கங்கள் — நாடெங்கும் எதிரொலித்தன.

வெளிநாட்டான் தாய் நாட்டைச் சுரண்டிச் செல்கிறான், ஆட்சி மூலம், வியாபார் மூலம், தந்திர சாகசங்கள் மூலம் என்ற கொந்தளிப்பு நாடெங்கும் பரப்பப்பட்டது-பேசப்பட்டது — சுதந்திர கீதம் பாடப்பட்டது. கடைசியில் வெற்றியும் கிடைத்தது—சுரண்டியவனின் ஆட்சி அதிகாரமும், கைமாறியது. சொந்த நாட்டினரே, தங்கள் சொந்த நாட்டை ஆளும் நிலை வந்தது.

X X X

"எங்க அப்பா ஏமாந்திருந்த போது எப்படியோ கடைக்குள் காலடி எடுத்துவைத்துவிட்டான்— கணக்கப்பிள்ளையும் ஆகி, பெட்டிச் சாவியையும் பெற்றுக் கொண்டு, இதுவரை கொள்ளையடித்திருக்கிறான். கடை எங்களுடையது—ஆனால் லாபம் அவன் வீட்டுக்குப் போகிறது! இதை, இன்னும் விட்டுவைக்க நானென்ன முட்டாளா, இதோ பாருங்களேன், இவனை விரட்டிவிட்டுத்தான் மறுவேலை!" என்று கடையுடையார் கர்ச்சித்தார் ஊராரிடம். உண்மையும் அதுதான், எனவே அவர் பேச்சைக் கேட்டதும் 'பிள்ளைக்குப்புத்தி வந்திருக்கிறது, பெட்டிச்சாவியைப் பிடுங்கிக் கொண்டுதான் மறுவேலைபார்க்கும்! பெட்டியடியில் உட்கார்ந்து பிடுங்கித்தின்ற பெத்தான் ஜம்பம் இனிச் சாயாது இவனைப் போன்ற கொள்ளைக்கா... களிடமிருந்து கடைதப்பிவிடும்- தம்பிகுடும்பமும் உருப்பட்டுவிடு... என்று ஊரார் கருதினர். அ... போலவே நடந்தது. பெத்தா... வெளியேறினார். கொஞ்சநாட்... கூட, ஆகவில்லை, டோபபெத்தான்- பெட்டியடியிலிருந்தார். திகைத்... னர் ஊரார், 'இதென்னப்பா, ... வலி போய் திருகுவலி! இதென்... கூத்து? பெத்தான் கூடாதென்று... இப்போதுபெரியபெத்தானையே உ... காரவைத்திருக்கிறார்! அவனுடை... அண்ணனல்லவோ, இவன்?,' என்... கேட்டனர், கடையுடையானை!

'ஆமாம், அவன் அண்ணன்தா... ஆனால் என்ன, நம்ம கடை வ... வேண்டாமோ, அதற்குத்தா... இவனை அழைத்திருக்கிறேன்" என்... பதில் சொன்னான். ஊராருக்கு ஒ... றும் புரியவில்லை, "சண்டப்பிரசண்... னாகயிருந்தான் இத்தம்பி, ... போது சரணாகதியடைகிறா... மூணாவது மனுஷனிடம், இதென்... கூத்து, வேடிக்கையாகயிருக்கிற... மூளைக்கோளாறு அல்லது புத்தி... லாமையா?" என்று திகைத்த... கேலிசெய்தனர், கிண்டலும், க... னமும் பரவ ஆரம்பித்தது.

X X X

வீரமுழக்கமிட்டு வெளிநா... டானை வெளியேற்றியவீரர்கள்,... தானை விரட்டிவிட்டுப் பெரிய ... தானை அழைத்தவனைப் போ... நடந்துகொள்ள ஆரம்பித்தால்,... போர்கலக்கமும், கவலையுமே ... வர்.

இந்த நிலைதான், இன்று, வெ... யனை விரட்டி விட்டுஆட்சிப்பீட... அரசோச்சுபவர்களைக் கா... போது, நமக்கு ஏற்படுகிறது — ... மைகள் மலரும் நயவஞ்ச...

வெளியேறிவிட்டனர் என்று நம்பிய மக்களில் நாமும் ஒரு பகுதியின ாதலால்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை, பிட்ட வீரமுழக்கமிட்ட காங்கிரஸ் ட்சியினர் நாம் தலைப்பில் குறிப் பிட்டிருப்பதுபோல, நாட்டவருக்கு றியவர்கள் ஆங்கிலேயனுடையசூது தியை, சுரண்டல் தந்திரத்தை, சொந்தநாட்டைச் சூறையாடிச்செல் லும் சூழ்ச்சியை, மக்களுக்கு எடுத் க்காட்டி, மகத்தான வெற்றியைப் பெற்றவர்கள்.

வியாபார நோக்கம் பேசி நாட் க்கு வந்த வெள்ளையர், ஆட்சியைப் பற்று, இந்திய நாட்டை எல்லா கையிலும் சுரண்டிச் சென்றனர். ங்குகள், கம்பெனிகள், போக்கு த்துச் சாதனங்கள் இன்னும் இது பான்ற முக்கியமானவைகளையெல் ம் இங்கு துவக்கி, அதன்மூலம் கொள்ளையிட்டுச் சென்றவர்கள், வர்கள்.

இந்தக்கொள்ளைக்குச்சாதகமாகத் கள் ஆட்சியை அமைத்துக் காண்டு, நாட்டை அல்லோல ல்லோலப்படுத்தினர். மூலப்பொ ள்களைக்கொண்டுசென்று பொருள் ளக்கொண்டுவந்து குவித்து, ஒன் க்குப் பத்தாக 'இலாபம்' பெற் னர்—நம்மக்கள் வாழ்வில்வேதனை பச்சிருஷ்டித்தனர்: வாழமுடியாத ்களாக்கினர்!

இந்த உண்மையை எடுத்துக்காட் த்தான், இன்று, அரசோச்சும் ங்கிரஸ் கட்சியினர், "அன்னியப் பொருள்பகிஷ்காரம்" "மில்துணிகளை டல்" சுதேசிப் பொருள்களை ஆத ரித்தல்" போன்ற பலகிளர்ச்சிகளைச் செய்தனர். ஆங்கிலக் கம்பெனிகள், இந்தியாவிலிருக்கக்கூடாது என்ற த்திரத்தின் விளைவுகளாக, ஆகஸ்டு கலவரம்" நடைபெற்ற பொழுது பலவெள்ளைக் கம்பெனி ள் தாக்கப்பட்டன! கல்கத்தா ராம்வே கம்பெனி கொளுத்தப் பட்டது—இம்பீரியல்பாங்கு, தாக்கு லுக்கு இலக்காயிற்று!

இவ்வளவு ஆத்திரமும் ஆவேச ம் உருவானதற்குக் காரணம், ட்சி அதிகாரத்தின்மூலம், தாய் நாட்டில் அன்னியர் பலவகைகளில் ண்டுதல் நடத்துவதா, என்ற ள்வி எரிமலை, வெடித்தது தான். வேதனை நீங்கியது. வெறுக்கப் பட்ட வெளிநாட்டான் வெளியேறி னான். சுதந்தரம்மலர்ந்தது. சொந்த நாட்டினர் ஆட்சிப்பீடமேறினர்.

X X X

"வெளிநாட்டினர், கலங்காமல் வரலாம்: பணம் கொண்டு வந்து போடலாம்!"

"அந்நியர் மூலதனம் இந்தியாவுக்குள்வர ஆட்சேபம் கிடையாது"

"எவரும்சந்தேகப்படவேண்டாம். எள்ளளவு தீங்கும் செய்யமாட்டோம்"

இந்தப்பேச்சுகளை, இன்று, தினசரி, நானாவிதமான வகையில் கேட்கிறோம். ஆட்சியை நிர்வகிக்கும் பெரியவர்முதல், பொதுக்கூட்டத்தில் பேசும் காங்கிரஸ்காரர்வரை, அந்நிய மூலதனம் இந்தியாவுக்குத் தேவை என்று கூறுகின்றனர்.

வெளிநாட்டில் வாழும் முதலாளிகளை இந்தியாவில் கொண்டுவந்து முதல்போடுமாறு, எப்படி வலைவீசுவது என்பதைக்காண இந்திய சர்க்காரின் நிதிமந்திரிக்காரியாலய காரியதரிசி, வாஷிங்டனுக்கும், லண்டனுக்கும் பறந்துகொண்டிருக்கிறார்.

"எனது தலையாய, அரசாங்கபூர்வமான கடமைகளில் ஒன்று அமெரிக்கரை இந்தியாவில் முதல்போடும்படி செய்வதுதான்" ('இந்து' ஜூலை 16, 1949) என்று அமெரிக்காவில் இந்திய அரசியல் தூதுவராகஇருக்கும் விஜயலட்சுமியார், வெளியிடுகிறார்.

பிரதமர் பண்டித நேரு, அமெரிக்கமுதலாளிகளை இந்தியத்தொழில் துறைகளில் பணம்போடச் செய்வதற்காக, அமெரிக்காவுக்கே சென்று வந்திருக்கிறார். அடிக்கடி, வேண்டுகோள்விட்டவண்ணமிருக்கிறார்.

முதலாளிகள் வருமானவரி, செலுத்துகிறார்களல்லவா, இதைப் போலவே வெளிநாட்டார் இங்கு முதலாளிகளாகஇருந்தால் இரண்டு மடங்குசெலுத்தவேண்டும். இதைக் குறைத்து, சலுகை தருகிறோம், சங்கடப்படாதீர்கள், வாருங்கள் என்று வரவேற்புக் கூறப்படுகிறது.

வெளிநாட்டார் முதல் கொண்டு வந்துபோட்டு, இந்தியாவில்தொழில்களைச்செய்வது, சுதந்திர இந்தியாவைப்பாதிக்காது என்றுபதில்சொல்லுகின்றனர், தேசியத் தலைவர்களை யாராவது கேட்டால்!

வெளிநாட்டார் வந்து இங்கு பணம் போட்டுத் தொழில் நடத்த வேண்டுமென வருந்திநின்றுஅழைக்கின்றனர் — விருந்து வைக்கிறேன் என்று விருத்தம் பாடுகின்றனர் — பெத்தானைப்போகச் சொல்லிவிட்டு, பெரிய பெத்தானை அழைத்தானே, கடையுடையான், அவனைப்போல!

* * *

'என்ன சலுகைகள் வேண்டுமென்றாலும் செய்துதருகிறோம், சர்க்கார் தொழில் ஆலைகளில் தலையிடக் கூடாது—தேசிய மயமாக்க நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று தானே கேட்கிறீர்கள், இன்னும் பத்து ஆண்டுகளுக்கு அது பற்றிய பேச்சே எடுக்கமாட்டோம்—என்ன சரிதானே!' என்று, வருந்தி வருந்தி அழைக்கின்றனர்வெளிநாட்டினரை, குறிப்பாக அமெரிக்க முதலாளிகளை!

முதலாளித்துவம, எப்போதுமே, தனக்கு வரும் லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது. இலாபம் கிடைக்கும் வழியெதுவோ, அதில் பிரவேசிக்க எப்போதுமே முதலாளித்துவம் தயங்காது.

முன்பெல்லாம், வெளி நாடுகளிலிருந்த முதலாளிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை, ஏற்றுமதி செய்து ஏழைநாடுகளைச் சுரண்டிச் சென்றனர்—இதுதான் கடந்த நூற்றாண்டில் பல 'காலனி' நாடுகளிலும், முதலாளித்துவம் கைக்கொண்ட முறை. ஆனால் இப்போது முதலாளித்துவம்முன்னணிஅமைத்துக்கொண்டு, தனது சுரண்டல் முறையை மாற்றிக்கொண்டு வருகிறது.

கடந்த நூற்றாண்டில், முன்னேற்றமடையாத பல நாடுகள், வெளிநாட்டார் பிடியில் சிக்கின—இந்தியா பிரிட்டிஷாரிடமும், இந்தோனேஷியா டச்சுக்காரரிடமும், காரைக்கால் புதுவை, இந்தோசைனா, பிரெஞ்சுக்காரரிடமும் சிக்கியதைப் போல! அங்கெல்லாம், அந்தந்த நாட்டு முதலாளித்துவம் தனது உற்பத்திப் பொருள்களைக் கொண்டு போய்க் குவித்து, அந்நாடுகளின் செல்வத்தைச் சுரண்டியது.

ஆனால், இப்போது, அதுவும்

போருக்குப் பின் அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகளில் சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டு, அந்நிய ஆதிபத்திய பிடியை விட்டு விலகி வருவதால், முன்பு சுரண்டிச் சென்ற வெளிநாட்டு முதலாளித்துவம் தனது 'உருவத்தை' மாற்ற நேர்ந்திருக்கிறது. பொருள்களைக் கொண்டுபோய், பணம் சம்பாதிப்பதற்குப் பதில் பணத்தையே கொண்டு போய்ப் போட்டுபணம் பெறுவது, இலாபம் தேடுவதுஎன்பதுதான்முதலாளித்துவம் கண்டுள்ள புது வழி! இப்புது வழியில் செல்ல வெளிநாட்டு முதலாளித்துவம்—அந்தந்த நாடுகளிலுள்ளமுதலாளித்துவத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, கூட்டாக, லாபக் கொள்ளையில் ஈடுபடுகின்றது

சுதந்திரக் கிளர்ச்சியிலீடுபட்டு, நிர்வாகத் திறமையில்லாது, திண்டாடி நிற்கும், புதிதாக விடுதலை பெற்ற நாடுகளை, இந்த முதலாளித்துவ 'புது வழி,' வெகு, எளிதில் வீழ்த்திவிடுகிறது.

இந்தியா புதிதாக விடுதலை பெற்ற நாடு. தனதுசெலவுகளை, வரையறையின்றி, அதிகப்படுத்திக்கொண்டு—அரசியல் தூதர்கள்,படைபலம், அந்தஸ்து, ஆடம்பரம்—என்று கூறிப் பணமில்லாது திண்டாடி நிற்கின்றது. எனவே பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குப் பதில்மூலதனத்தைக் கொண்டு சென்று ஆலைகளாகவும், கைத்தொழிற்சாலைகளாகவும் நிர்மாணித்து, எப்போதும் போல, இலாபக்கொள்ளை பெற விரும்பும் வெளிநாட்டு முதலாளித்துவம், ஆளவந்தாரை அன்புப் பேச்சால்,' அடடா என்ன கஷ்டப்படுகிறீர்கள் புதிதாக கிடைத்த சுயராஜ்யத்தை சுகராஜ்யமாக மலரச் செய்ய' என்ற சாகச மொழிகளால் மயக்குகிறது.

இந்த மயக்கம்தான் இன்று இந்தியாவைப் பீடித்திருப்பது. இதன் விளைவாகத்தான் துயரக்கடலில் திக்கித் திகைக்கும் காங்கிரஸ் ஆளவந்தார் 'வெளிநாட்டுமூலதனம்' வேண்டும் என்று கூறுவதும்.

'பணமில்லை சர்க்காரிடம், சர்க்காரே புதுத் தொழிற்சாலைகளை நிர்மானிக்க' என்று இந்தியசர்க்கார் கூறுகின்றனர். உண்மைதான், வீண் விவகாரங்களில், பொக்கிஷத்தைப் போக்கடித்துக் கொண்டு திண்டாடிக்கொண்டுதான் நிற்கின்றனர்!

சர்க்காரிடம் பணமில்லையே தவிர சர்க்காரை ஆட்டிவைக்கும் இந்திய முதலாளித்துவம் வசம் ஏராளமான பணம் கிடக்கிறது. போர்க் காலத்தில், கள்ளமார்க்கெட்டில் கொள்ளையடித்த பணம் கோடிக் கணக்கில் பதுக்கப்பட்டிருக்கிறது!

பதுங்கிக்கிடக்கும் பல கோடி ரூபாய்களையும் பலாத்காரம் மூலம் வெளிக்கொணரவோ காங்கிரஸ் சர்க்காருக்கு தைரியமில்லை! காரணம், காங்கிரஸ் இன்று முதலாளித்துவ முகாமாகிவிட்டது. எனவே ஆட்சியாளர் கெஞ்ச, இவர்கள் மிஞ்ச.வேடிக்கையான காட்சி நடைபெறுகிறது நாட்டில்!

அப்படி ஆட்சியாளர் கோரிக்கைக்கு செவிசாய்த்து இந்திய முதலாளித்துவம், தனது பணத்தைப் போட்டு, புது ஆலைகளை நிர்மாணித்தாலும், அவைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை அந்நிய நாடுகளிலிருந்துதான் வரவழைக்கவேண்டும். ஆகவே இந்திய முதலாளித்வம்—தனக்குப் போட்டியாக வெளிநாட்டு முதலாளித்வம், வருவதை எதிர்க்கவில்லை. அதற்குப் பதில் இரண்டும் கை கோர்த்துக்கொண்டு, நேசமாய் "கூட்டாக,' தொழிலாலைகளை நிர்மாணிக்கத் திட்டம் தீட்டிக்கொள்கின்றது.

வெளிநாட்டு மூலதனத்தை விரும்பி அழைப்பதற்கு, இன்றைய ஆளவந்தார் கூறும் காரணம் 'நாட்டின் நலனுக்காக' என்பது. நாட்டு நலனுக்காக என்றால்,முதன்முதலில் வரும் மூலதனம் செலவிடப்பட வேண்டிய இடம்— வயல்களாகும். விவசாயம்தான் இந்தியாவின் முக்கிய தொழில்—இன்றுள்ள முக்கிய பிரச்னையும் உணவுப் பிரச்னைதான்.

நாட்டு முன்னேற்றத்துக்காகத் தான், வெளி நாட்டு மூலதனத்தை விரும்புகிறோம் என்று ஆளவந்தார் கூறுகின்றனர்.

இந்தியா எவ்வளவு கஷ்ட நிலையிலிருக்கிறது. இதைச் சமாளிக்க உதவுவது—மனிதாபிமானம் கொண்ட எங்கள் கடமையல்லவா? எனவே தான் நாங்கள் மூலதனம் தருகிறோம் என்று வெளிநாட்டு முதலாளித்துவமும் கூறுகிறது.

ஆனால் வரும் மூலதனமோ, நாட்டின் உயிர்நாடியான, முக்கியமான விவசாயத்துறைக்குஅல்ல. தொழில் துறைக்குத்தான்!

முதலாளித்துவத்துக்கு உள்ளபடியே மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென்ற ஆசையும், ஆவலுமிருந்தால், பட்டினிகிடக்கும் 'பாமரன்' கதறித் துடிக்கும் காத்தான்களின் வாழ்வுக்காக, அவர்கள் தொழில் வளம் பெருவதற்காகச் செலவிடப்படவேண்டும்.

ஆனால்! செலவிடப்படும் இடமோ—தொழிற்சாலைகள் மட்டும்தானே!

இது ஏன்—பதில் எளிதானது; ஆனால் முதலாளித்துவம், மக்கள் நன்மையைப்பற்றி போடும் பகல் வேஷத்தை வெளிப்படுத்துவது!

> "பணம் படைத்தோர், மக்களின் வாழ்க்கையுயர்வை மனதில் வைத்துச் செலவிட முன்வரமாட்டார்கள். அப்படிமுன் வரும் நிலை வந்தால் பணம் படைத்தோருக்கு -முதலாளித்துவத்திற்கு- இலாபம் கிடைக்காது. முதலாளித்துவமும் இருக்காது.
>
> பேதாபேதமில்லாத மக்கள் வாழ்வு உதயமாகி விட்டதென்றால், முதலாளித்துவம் எங்கிருந்து இலாபக்கொள்ளையடிக்கும்? எனவே, உடனடியாக முதல் போட்டதும் இலாபம் தரக்கூடிய வகைகளில் முதலாளித்துவம் பிரவேசிக்குமே யொழிய, மக்கள் சங்கடங்களைப் போக்கும் வகைகளில் ஈடுபடாது"
>
> —லெனின்

இந்தக் கருத்து, இப்போது இங்கு ஏற்பட்டுள்ள கேள்விக்கான தக்கபதிலாகும்.

சீக்கிரம் விற்பனையாகக்கூடியதும், அடிக்கடி தேவைப்படுவதுமான பொருள்களை உற்பத்தி செய்தால் தான், பணம் போட்டோருக்கு இலாபம் கிடைக்கும்.

விவசாய அபிவிருத்திக்குப்பணத்தைப் போட்டுவிட்டு — காத்துக் கொண்டிருக்க முடியுமா?

அதைவிட, குடை, பூட்ஸ், சைகிள், டிராக்டர், துணி ஆலை முதலானவைகளில் 'முதல்' போட்டால் இலாபத்தை விரைவில் எளிதாகக் காண முடியும்!

எனவே, நாட்டு முன்னேற்றத்

க்காகத்தான் வெளிநாட்டு மூலத ம் என்று கூறுவது—வெளிவே ம்—பித்தலாட்டம்!

சுயராஜ்யப்போரின்போது சொன் தையெல்லாம், காற்றில் பறக்க ட்டிருக்கின்றனர் காங்கிரஸ் ஆள ந்தார். சுயராஜ்யப் போரின் சூட் ம்கூட, மறக்கப்படுகிறது. "வெளி ட்டானுக்கிங்கென்ன வேலை" என்று கட்டவர்கள் வெளிநாட்டாரே, ருக மூலதனத்துடன்! என்று அழைக்கிறார்கள்.

கேட்டால்,

பணமில்லை,

பரவாயில்லை,

நாட்டுநன்மைக்குத்தான்,

ன்று பதில் கூறுகிறார்கள், மக்களை தலாளித்துவப்பிடிக்கு சிக்கவைக் றார்கள்.

விரட்டியடிக்கப்பட்ட வெள்ளை ட்டு ஆதிபத்தியமோ பாகுமொழி, ச்சைச்சிரிப்பு, இச்சைப் பேச்சு ன், நுழைகிறது—உள்நாட்டுமுத ளிகளைத் துணையாக்கிக்கொண்டு!

இந்திய முதலாளித்துவமோ ன் இட்டபடி காங்கிரஸ் ஆடும் ன்ற ஆணவத்துடன் இருக் றது—இந்தச் சர்க்காரை நடத்து றது.

புது ஆலைகளை நிர்மாணிக்கப்பண ல்லை யென்று கூறும் ஆளவந் ரோ, அநாவசிய வீண்பெருமை ல் பணத்தை விரயமாக்கிக் காண்டு, திண்டாடி நிற்கின்றனர்.

கள்ளமார்க்கெட்டில் கொள்ளை த்து, கோடிக்கணக்கில் பணத் தப்பதுக்கி வைத்திருக்கும் இந்திய தலாளிகளை — அமெரிக்க (வெளி ட்டு) முதலாளிகளுடன் 'பேரம்' சி, கூட்டுக்கொள்ளை நடத்தத் ட்டமிடுகின்றனர்.

பதுங்கிக்கிடக்கும் பணத்தைப் ங்கி நாட்டில் தொழிற்சாலைகளை மாணிக்கப் பயப்படும் அரசாங் மா-இந்தியமுதலாளிகளுக்கு அனு ணையாக, அமெரிக்க முதலாளி ள அழைத்துவிடுகின்றனர்.

"மக்கள் ஆட்சி" என்று முழக்க ட்டவர்கள், இருமுதலாளித் வம் இந்நாட்டு மக்கள் உழைப் ல் உருவாகும் இலாபத்தைச் ண்டவழி அமைத்துத் தருகிறது.

வெளிநாட்டாரை வெறுத்தோர், வசதி செய்து தருகின்றனர், அவர் கள் மூலதனம் வந்து, இங்கிருந்து இலாபம் சுரண்டிச்செல்ல

விநோதப்பாதையில் நடந்துசெல் கின்றனர், விடுதலைகோரி வெற்றி பெற்றவர்கள். அவர்கட்கு வேடிக் கையாகயிருக்கிறது இப்பாதை: நமக்கோ வேதனையாகயிருக்கிறது, விளைவு மோசமாகுமே என்ற பயத் தால்!

—✱—

நாடோடி

(13–ம் பக்கத் தொடர்ச்சி)

கள் விற்பனையாளர். அவர் செய்த மகா'பாபம்' அவர் யூதராக இருந் ததுதான்! யூதனுக்கு மகனாக பிறந்த காரணத்தால ஐன்ஸ்டைன் பிற்கா லத்தில் பட்டபாடு கொஞ்சமல்ல. தென்பவேரியாவில் பிறந்த அவரு டைய வாழ்க்கை மாணவப்பருவத்தில் ஜெர்மனி ஸ்விஸ் இருநாடுகளிலும் உழன்றது. முதலில ம்யூனிச் நகரி லும் பின்னல், 1894-ல் தாயதந்தை யர் இத்தாலி சென்ற பிறகு ஸ்விஸ் நாட்டைச் சேர்ந்த ஆரு நகரிலுமாக அவருடைய பள்ளிப படிப்பு நடை பெற்றது. அவருடைய கல்லூரிப் படிப்பு சூரிச்சில் ஆரம்பிக்கப்பட் டது. பட்டம் பெற்ற ஐனஸ்டை னுக்கு வேலை கிடைப்பது அரிதா யிற்று! வயிற்றுப் பாட்டைத்தீர்க்க வேண்டி புதுக்கருவி அமைப்புரிமை ஆராய்ச்சி நிலையத்தில சாதாரண வேலை யொன்றில் குறைந்த அளவு ஊதியத்துடன் வாழ்க்கையைத் துவங்கினர். பல்கலைக் கழகத்திலே அன்றி ஏதாவது ஒரு பள்ளியிலா வது ஆசிரியப் பதவியிலமர அவர் ஆசைப் பட்டார். ஆனல் அவரை ஆசிரியராகச் சேர்த்துக் கொள்ள எந்தப் பள்ளியும் தயாராகவில்லை. வாழ்வதற்கேற்ற அளவுக்குக்கூட அவருக்கு வருமானம் கிடைக்க வில்லை. 1902-லிருந்து 1909-வரை ஸ்விஸ் நாட்டு ஆராய்ச்சி நிலையத் திலேதான் அவர் வாழ்க்கை நடந்து வந்தது. அவருடைய வாழ்க்கைக் கனவுகள் பலிதமாகாவிட்டாலும் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்த வாறே தான்படித்தவற்றைதிரும்பத் திரும்ப ஆராய ஆரம்பித்தார் ஐன்ஸ்டைன். ஓய்ந்த நேரங்களில் பௌதீக விஞ்ஞான விஷயங்களைப் பற்றியே சிந்தனை செய்தார். சிறிய வயதிலிருந்தே பிதகோரஸின் கணித முறைகளையும் நியூடனின் ஆகர் ஷண சக்தியைப் பற்றியும் சிந்தித்து வந்த ஐன்ஸ்டைன் இந்த நேரங் களில் அதிகமாக ஆராய்ச்சி செய் தார். "பொருள்களின் ஒப்புமைக் கொள்கை" "மின் சக்திகளின் தன்மை" இவைகளைப் பற்றி அவர் ஆராய்ந்ததின் காரணமாக 1905-ல் விரிவான நூற்களை வெளியிட்டார். சூரிச் பல்கலைகழகம் அவருக்கு டாக் டர் பட்டம் அளித்தது.

ஐன்ஸ்டைனின் ஆராய்ச்சியுரை அதுவரை கணிதத்திலும் பௌதீகத் திலும் தீர்க்க முடியாதிருந்த சில சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்தது டன் விஞ்ஞான உலகிற்கே சில புதிய தத்துவங்களை அளித்தது. ஆராய்ச்சி நிலையத்திலே சாதாரண வேலை செய்து வந்த ஒருவர் இவ்வளவு சிக் கலான பிரச்னைகளைப் பற்றி ஆராய்ச்சியுரை வெளியிட்டது விஞ் ஞான உலகத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பற்பல விஞ்ஞானிகள் ஐன்ஸ்டைனுடைய அறிவுத் திற மையைக் காண ஆரம்பித்தனர்.

அதன் பலன் ஸ்விஸ் தலைநகர் பேர்ன்-ல் உள்ள பல்கலைக் கழ கத்தில சம்பளமில்லா ஆசிரியராக ஐன்ஸ்டைன் அமர்த்தபபட்டார். பிறகு சின்னட்களில் சூரிச் பல்கலைக் கழகத்தில துணை ஆசிரியராக அமர்த் தபபட்டார். இதன் பிறகுதான் ஐன்ஸ்டைனுடைய வாழ்க்கையில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அவர் எதிர்நோக்கியபடி பல்கலைக் கழகத்திலே அவருக்கு வேலை கிடைத் தது. அதை அவர் சரிவர பயன் படுத்திக்கொண்டார். அவருடைய தீர்க்கமான ஆராய்ச்சியுரை ஆசிரி யர்களையும் மாணவர்களையும் ஒருங்கே கவர்ந்தது. அவருக்கும் அவரிஷ்டப்படி பௌதிக ஆராய்ச்சி கள் செய்ய வசதி அளிக்கப்பட்டது.

1911-ல் ஐன்ஸ்டைன் பிரேக் பல் கலைக்கழகத்தில் பேராசிரியராக நிய மிக்கப்பட்டார். ஆனல்பிரேக்வாழ்வு சிலநாட்கள் தான். மறு ஆண்டே சூரிச் பல்கலைக் கழகத்திற்கேபேராசி ரியாக வந்துவிட்டார். ஐன்ஸ்டை னுடைய அறிவுத் திறமை நாளாக ஆக எல்லோருக்கும் தெரியவந்தது. 1914-ல் பெர்லினின் ஜெர்மன் விஞ் ஞானிகள் சங்கத்தில் அவருக்கு

இடமளிக்கப்பட்டது. ஜெர்மனியிலேயே விஞ்ஞானிகளுக்கு அளிக்கப்படும் உயர்ந்த பதவி அதுதான். அதன்பிறகு ஐன்ஸ்டைனுடைய முழுநேரமும் ஆராய்ச்சியிலேயே செலவிடப்பட்டது. விஞ்ஞானிகள் குழுவில்இடமளிக்கப்பட்டகாரணத்தால் அவர் ஜெர்மன் பிரஜையாகவும் ஆனார். சிறுவயதில் ஸ்விஸிலிருந்த காரணத்தால் அவர் ஸ்விஸ் பிரஜையும்கூட!

1914-லிருந்து 1932-வரை அவர் வாழ்க்கை பெர்லினிலேயே கழிக்கப்பட்டது. இந்த பதினெட்டு ஆண்டுகளில் அவருக்கேற்பட்ட இன்பதுன்பங்கள் எழுதமுடியாது. "எங்கிருந்தோ வந்த யூதன், ஸ்விஸ் நாட்டில் கல்வி பயின்றவன் எங்களுக்கு புத்தி கூறுவதா?" என்று ஜெர்மன் விஞ்ஞானிகளில் பழமை விரும்பிகள் பலர் உரைத்தனர். ஐன்ஸ்டைன் கணித முறைகளையும் பௌதிக ஆராய்ச்சியுரைகளையும் ஆதாரமற்றது என்று அவர்கள் உரைத்தனர். தங்களுடைய அதிகாரத்துக்கு ஆபத்துவந்துவிடுகிறதோ என்று பயந்த சுயநல 'அறிஞர்'கள் பலர் ஐன்ஸ்டைனுடைய கொள்கைகளை எதிர்த்துக்கட்சி சேர்த்தனர்! மேடைப்பிரசங்கங்கள் செய்தனர்! ஐரோப்பாவில் எங்கும் அவர் புகழ் பரவிக்கொண்டிருந்த அதே நேரத்தில் அவருக்கு எதிர்ப்பு வளர்ந்து கொண்டேயிருந்தது. ஆனால் ஐன்ஸ்டைனுடைய அறிவுத்திறனை எத்தனை நாட்கள் எதிர்ப்புச் சக்திகள் தாக்க முடியும்! அவர் வெறும் விஞ்ஞானியாகமாத்திரமிருந்தால் ஒருவேளை ஒழித்திருப்பார்கள். அவர் மனிதத் தர்மத்திற்காக போரிடும்போரறிஞன். அவருக்கு, "விஞ்ஞானம்" மனிதனுடைய பொதுச்சொத்து. அதை வளர்ப்பது மனித சமுதாயத்தையே வளர்ப்பது. ஆகவேதான் எந்த எதிர்ப்பையும் சமாளித்துக்கொண்டும் தன்னுடைய ஆராய்ச்சியை செய்துகொண்டிருந்தார்.

இதற்கிடையில் 1914—18 மகா யுத்தம் வந்து சென்றது. போர் நடப்பது மக்களுடைய முன்னேற்றத்திற்கு எந்த அளவுக்கு ஆபத்து என்பதை ஐன்ஸ்டைன் நன்கு உணர்ந்தவர். போர் சமயத்தில்கூட போர்புரியும் இரு அதிகார வர்க்கங்களையும் பலமாகக் கண்டித்தார். போர்க்காலங்களில் அவருடைய பேச்சு அறவுரையாகவே அமைந்தது. அவருடைய அறிவுரையை மதிக்க ஆதிக்கக்காரர்கள் தயாராகவில்லை. இதே மாதிரி இங்கிலாந்தில் பெர்னாட்ஷா, எச். ஜி. வெல்ஸ்; பிரான்ஸில் ரோமெய்ன் ரோலண்ட் முதலான பல அறிவாளிகளின் வார்த்தையை ஆதிக்க வெறியர்கள் கேட்க மறுத்தனர். சண்டைபோட்டு பல இலட்ச மக்கள், பொருள் எல்லாவற்றையும் விரயமாக்கினர். முன்னேறிவந்த மனித சமுதாயத்தை பல ஆண்டுகளுக்கு பின்னால் கொண்டு தள்ளினர்.

சண்டை முடிந்தது. சர்வ தேசிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அறிவாளிகள் குழு ஒன்று கூட்டப்பட்டது. அதில வெல்ஸ், ரஸ்ஸல், ரோலண்டு, ஐன்ஸ்டைன் எல்லோரும் அங்கத்தினர்கள். இனியாவது உலகத்தில் சமாதானம்நிலவுவதற்கு வேண்டியவைகளை செய்யலாம் என்று எல்லோரும் முனைந்தனர். வளர்ச்சியடைந்த மக்கள் கூட்டத்திடையில்தான் விஞ்ஞானம் வளரும் என்று ஐன்ஸ்டைன் எங்கு பார்த்தாலும் பிரசங்கம் புரிந்தார்.

1921-ல் ஐன்ஸ்டைன் பாரிசில் சொற்பொழிவாற்றினார். அதற்கு பிறகு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் இப்படி உலகம் பூராவும் அவர் சுற்றுப்பிரயாணம் நடந்தது. எங்கும் அவர் சமாதானத்தின் அவசியத்தைப் பற்றியும் போர் நோக்கம் கொள்ளும் அரசியல் வாதிகளைக் கண்டித்தும் பேசிவந்தார். அவருடைய பொன்மொழிகள் அறிவாளிகளால் போற்றப்பட்டது. அதே நேரத்தில் ஆதிக்கக்காரர்களுக்கு அருவெறுப்பை அளித்தன!

1022-ல் ஐன்ஸ்டைனுக்கு நோபல் பரிசு அளிக்கப்பெற்றது. ஆம்ஸ்டெர்டாம், கோபன் கேகன் பல்கலைக் கழகங்கள் தங்களுடைய விஞ்ஞானக் குழுவில் கௌரவ அங்கத்தினராக சேர்த்துக் கொண்டன. ஜினிவா, மான்செஸ்டர், ரோஸ்டாக், பிரின்சிடன் பல்கலைக்கழகங்கள் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை அளித்தன. சரித்திரத்திலே எந்த விஞ்ஞானிக்கும் இந்த அளவுக்கு வரவேற்பும் மரியாதையும் நடைபெற்றதேயில்லை. ஆனால் வெளியுலகத்தில் இவ்வளவும் நடந்துகொண்டிருக்கும் பொழுதே ஜெர்மனியில் அவருக்கு எதிரான சக்தி வளர்ந்து கொண்டேயிருந்தது. ஐன்ஸ்டைனுடைய ஜெர்மன் பற்று அவரை எல்லாஎதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு அவரை அங்கேயே இருத்தியது. ஆனால் 1932—33-ம் ஆண்டுகள் அவருடைய பொறுமையை சோதித்துவிட்டன.

X X X

1932 டிசம்பர் இறுதியில் ஐன்ஸ்டைன் அமெரிக்காவிற்குப் பயணமானார். அவர் சென்ற சின்னாட்களுக்கெல்லாம் ஜெர்மனியில் பெரும்அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. அதிகார வெறிபிடித்த ஹிட்லர் அதிகாரத்திலமர்ந்தான். ஹிட்லரை ஆட்சிப்பீடமேறுவதற்கு தங்களையறியாமலே கம்யூனிஸ்டு ஆட்சியினர் உதவி செய்தனர். அதன் பலன் கைமேல் கிடைத்தது. ஹிட்லர் ஆட்சிபீடமேறியவுடன் கம்யூனிஸ்டுகள் உள்பட எல்லாக் கட்சிகளையும் சட்டவிரோதமாக்கினான்! நாட்டில் உள்ள முற்போக்காளர்கள் எல்லோரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

"ஜெர்மன் நாடுதான் உலகத்தில் உயர்ந்தது. ஆரியர்தான் உலகத்தில் உயர்ந்தவர்கள், நாமே உலகத்தை ஆளப்பிறந்தவர்கள்" என்ற கோஷம் ஜெர்மனி பூராவும் பரப்பப்பட்டது. ஹிட்லரால் ஜெர்மனியில் உள்ள யூதர்கள் துரத்தியடிக்கப்பட்டனர். யூத அறிவாளிகள் பலர் சிறையிலடைக்கப்பட்டும் கழுவிலேற்றப்பட்டும் அழிக்கப்பட்டனர். ஹிட்லரின் ஆதிக்கத்தைக் கண்டு உலகமே திடுக்கிட்டது.

தனி மனிதனின் சுதந்திரத்தை தன் உயிர் மூச்சாகக் கருதி வந்த ஐன்ஸ்டைனுக்கு ஜெர்மனியில் நடக்கும் நிகழ்ச்சிகள் தாங்க முடியாத துயரத்தைக்கொடுத்தது. 'இது அக்கிரமம். கொடுங்கோல்ஆட்சி' என்று கதறினார்.

"அவனும் யூதன் தானே, வேறென்ன சொல்வான்" என்றனர் நாஜீச பித்தர்கள்.

"நான் யூதனென்று கூறிக்கொள்ள மாட்டேன். என்னிடம் நீங்கள் கூறும் யூத குணங்கள் எதுவும் கிடையாது" என்றார் ஐன்ஸ்டைன்.

பாவம்! அவர் கூறுவதைக் கேட்க ஜெர்மனியில் ஒரு ஜீவன்கூட இல்லை. அது மாத்திரமில்லை. அவர் பேசிய தர்மவாதம் கூட தப்பான முறையில் அர்த்தம் செய்யப்பட்டது.

"ஜெர்மனியைப்பற்றி வெளிநாடுகளில் இழித்துரைக்கிறான்" என்று ஆரம்பத்தில் கூறியவாறு அவரைப்பற்றி தப்புப் பிரச்சாரம் வேகமாக நடைபெற்றது.

1933-மார்ச்சில் ஐன்ஸ்டைன் ஐரோப்பா வந்தார். அவர் திரும்பவும் ஜெர்மனி செல்வது உயிருக்கே ஆபத்தாகமுடியும் என்று நண்பர்கள் அறிவுரை புகன்றனர். இதற்கிடையில் ஜெர்மன் விஞ்ஞானிகள் குழுவே அவருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் ஐன்ஸ்டைன் செய்த பல சொற்பொழிவுகளின் துண்டுகள் வைக்கப்பட்டு, அவைகள் எல்லாம் ஜெர்மனியை எதிர்த்து வெளிநாடுகளில் செய்தவையென்றும், ஆதலால் ஐன்ஸ்டைன்நாட்டுத் துரோகக் குற்றத்திற்கு பதில் கூற வேண்டுமென்றும் கண்டிருந்தது.

ஐன்ஸ்டைன்பெல்ஜியத்திலிருந்து கொண்டு அதற்கு தக்கபதிலை எழுதினர். மனித சமுதாயத்திற்கு பொதுவான அறிவுரைகள்தான், தான்கூறியவை என்பதை எடுத்துக் கூறியிருந்தார்.

அந்தக்கடிதம் ஜெர்மன் விஞ்ஞானிகளை எந்தவிதத்திலும் திருப்தி செய்யவில்லை. ஐன்ஸ்டைன்நாட்டுக்கு துரோகம் செய்துவிட்டார் என்றே கூறினர்.

ஐன்ஸ்டைன்ஜெர்மன்விஞ்ஞானக் குழுவிலிருந்து ராஜினமா செய்வது தவிர வேறுவழியில்லை. 1933மார்ச்சு 28-ம் தேதி தான் ஜெர்மன் விஞ்ஞானிகள் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டதாகக்கடிதமெழுதினர்!

ஜெர்மனியிலிருந்த அவருடைய வீடு, பாங்கிபணம் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டது. ஐன்ஸ்டைன் ஜெர்மனியரால் எதிர்த்து ஒதுக்கித் தள்ளப்பட்டார்.

இனிமேல் அவர் வாழ்க்கை எந்த நாட்டில்? ஐரோப்பாதேசம் எல்லாம் அவரை அழைத்தது. ஐன்ஸ்டைனுடைய நொந்தமனம் ஐரோப்பிய கண்டத்தைவிட்டே ஓடிப்போகத் தூண்டியது. அமெரிக்காவிற்குப் பயணமானர்.

அமெரிக்காவில் ப்ரின்சிடன் பல்கலைக் கழகம் அவருக்கு சகல வசதியும் செய்துகொடுத்தது. 1933-முதல் அவருடையவாழ்க்கை ப்ரின்சிடனிலியே நடந்துகொண்டிருக்கிறது. அவருக்குவேண்டிய எல்லா உதவியையும் அமெரிக்க அரசாங்கம் செய்கிறது.

பொதுவாழ்க்கையில் அவர் உபதேசங்கள் புரிவதை நிறுத்திவிட்டு தன்னுடைய கணித, பௌதீக ஆராய்ச்சியிலேயே முழுதும்இறங்கி விட்டார்.

சமீபத்தில் ஐன்ஸ்டைன் முறைமைப் பொதுக்கொள்கை (General Theory of Relativity) என்று ஒளி அணு ஆராய்ச்சி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதற்கு முழு விளக்கமும் அவர் இன்னும் தராவிட்டாலும் உலக விஞ்ஞானிகளில் அவ்வளவு பேரும் ஒரு மனதாக அவருடைய இந்தப்புதிய ஆராய்ச்சியை வியந்துள்ளனர். ஐன்ஸ்டைனுடைய பௌதீகக் கொள்கைகளை இங்கு கூறுவது அவசியமற்றது.

X X X

ஐன்ஸ்டைன் பிறவியில் யூதன். ஆனால் வாழ்வில் தனி மனிதன், வெறும் மனிதன்தான். அவன் சிறந்த கணிதாசிரியன்; பௌதீகத்தில் நிபுணன். பேரறிவாளன்; எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த சிந்தனையாளன்.

அவன், கோபர்னிகஸ், கெப்ளர் பேகன், ஹார்வி, டெரபிள், கலிலியோ, டொர்சிலி, பாயில், ஹெல்மண்ட், ரோமர், டெஸ்காடஸ், நியூடன், முதலானவர்களின் பரம்பரை ரஸ்ஸல், வெல்ஸ், ஷா, ரோலண்ட் பிராண்ஸ், முதலானோரின் குழு. அவனுடைய வளர்ச்சி விஞ்ஞானத்தின் வளர்ச்சி. அறிவின் மதிப்பு. சாவைப் பிடிக்க நிற்கும் அவன் உயிர் இன்னும் பல நாட்கள் உலகிலிருந்தால் மனித சமுதாயத்திற்கு இலாபம். நம்முடைய விருப்பம்நிறைவேறட்டும்.

— ❀ —

கிருஷ்ணன் நாடக சபையின்

புது முகாம்!

★

மகிழ்ச்சி விருந்து! மகத்தான நாடகங்கள்!

பெங்களூர் சிடி, குப்பி தியேட்டரில்

கே. ஆர். ராமசாமி நடிக்கும்

1—3—50 முதல் துளி விஷம் ஆரம்பம்

(A. S. A. சாமி)

கண்கவர் காட்சிகள்! கருத்தைஅள்ளும் கதைகள்!

உரிமையாளர், K. R. ராமசாமி.

திராவிட நாடு

ஞாயிறு] 5—3—50 [காஞ்சி

தூக்கம் வரவில்லை!

★

'இரவு வந்துவிட்டது, இனி நம் ராஜ்யந்தான்' என அலறித் துடிக்கும் கொள்ளிவிழி ஆந்தை, குமரனை எண்ணிக் கண்ணீரால் தலையணையை நனைத்துத் துடிக்கும் குமரி, 'கோமள வல்லியைக் காணேன், அந்தக் கொஞ்சும் கள்ளி எங்கே' என்று குமுறித் தவிக்கும் காதலன், கையில் கன்னக் கோலும் கருத்தில் கள்ளத்தனமும் கொண்டு அடிமேல் அடிவைத்துச் செல்லும் திருடன், 'இப்பொழுது தான் எனக்குப் பொழுதுவிடிகிறது' என்று எக்காளத்துடன் கிளம்பும் எத்தர் கூட்டம்'—இந்த ரகத்தில் எதைச் சேர்ந்தவருமல்ல, அவர்! எனினும் அவருக்குத் தூக்கம் வரவில்லை –அதுவும் ஒரு நாளல்ல, இரண்டு இரவுகள் தூக்கம் வரவில்லையாம் — துக்கம் அவரைத் துடிக்கச் செய்துவிட்டதாம். தள்ளாத வயது–எனினும் பொல்லாத நினைவுகள் அவரைப் பொசுக்கியிருக்கின்றன, வேதனைத் தீயில் வேகவைத்திருக்கின்றன, வெளியிடுகிறார் அவர் 'இரண்டு இரவுகளைத் தூங்காமலேயே கழித்தேன்' என்று!

X X X

நான்கு திசைகளிலிருந்து செய்திகள்-நாராசம்போல் காதைத் துளைக்கின்றன, 'கேஸ் ஜெயிக்கவில்லை, தோற்றுவிட்டது' என்று தகவல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. எப்படிப் பொறுப்பார்? அதுவும் இந்த முடிவுகளை எதிர் பார்க்காத நிலையில்! வெளியில் கிளம்ப வெட்கமாயிருக்காதா, கேலியும் கிண்டலும் சித்திரவதை செய்துவிடாதா—இது பற்றிய யோசனையிலேயே மூழ்கிக் கிடந்தாராம், தூங்கவில்லையாம், தூக்கம் வரவில்லையாம் — கூறுகிறார் அவர், நமது மாட்சிமை தங்கிய துணைப் பிரதமர் சர்தார் பட்டேல்!

இரும்புநெஞ்சன் என்று அவரை அழைப்பார்கள்—எதற்கும் கலங்காதவர் என்ற பொருளுடன். அவர், சொல்கிறார், "கலக்கத்துடன் இரண்டு நாட்களாய் விழித்துக்கிடந்தேன்" என்று!

என்னென்ன "சொன்னேம், எதையும் சாதிக்கவில்லையே! கட்சிமானம் வேறு காற்றில் பறக்கிறதே, கண்டவர்எல்லாம் 'காங்கிரஸ்'பேர்சொல்லி மிரட்டுகின்றனரே — ஐயோ, இதற்குத்தானா இவ்வளவு பாடுபட்டேன்? சிறை சென்றேன், கல்உடைத்தேன், கஷ்டப்பட்டேன்?

எவ்வளவு எதிர்பார்த்தனர் மக்கள்? 'ஜே, ஜே' என்றுஅன்றுகத்திய அவர்களுடைய வாயா இன்று "ஐயோ, ஐயோ" என்று அலறுவது, கேட்கத்துடிக்கிறதே உள்ளம்...... கேடும் தீமையுமா எனது நாட்டில், பஞ்சக்குமறலும் பரிதாப ச்சப்தமுமா என்சேவை தந்த விளைச்சல்! என்ன செய்வேன், இவைகளைக் களைய நான் என்ன செய்வேன்?

துப்பாக்கிப் பிரயோகம் — பலி! காயம்! குண்டடி! பரிதாபமானசெய்திகள்—அதுவும் நானிருக்கும் ராஜ்யத்தில், நான் ஆளும்நாட்டில், எனது மக்கள்மீது? கல்கத்தா......சேலம் ......நாசிக் ஒவ்வொன்றும் என்இதயத்தைக் கசக்கிப்பிழியும் காட்டுச் செயல்கள்! முடியாது, இதை இனி என் அகிம்சா ஆட்சியில் நீடிக்கவிட முடியாது.

நித்திரை என்விரோதியாய்விட்டதே, நிம்மதியான வாழ்வு இனிஎப்போது எனக்கு? துன்பமும் ஏழ்மையும் எப்போது தொலையும்—இன்பமும் மகிழ்வும் என்றுதான் நிறையும்? எண்ணமுடியவில்லையே என்னால், எனது கண்கள் கலங்குகின்றனவே......"

என்றெல்லாம் கவலைப்பட்டதில்லை! சுகமாகத் தூங்கிக்கொண்டுதான் இருந்தார்—நாட்டில் குமுறலா—பரவாயில்லை! கொதித்துப் பேசுகிறார்களா மக்கள்—கொஞ்சம் அதட்டு! மீறினால் அடித்து விரட்டு! வேலைநிறுத்தமா — விடாதே, சட்டவிரோதமாக்கு! நம் ராஜ்யத்தின் மீது குறைகூறுகிறானா — நம்மவன் என்கிறாயே, கலங்காதே பிடித்துவா, போடு ஜெயிலில்!

என்று அழுகுரல், வேதனைக் குமுறல், எதற்கும் அஞ்சாது உத்தரவுமேல் உத்தரவு இடும் அ[...] இரும்புமனிதர்—தூங்க வில்லை[...] இரண்டு நாட்கள்! மக்கள் மன்[...] தில் துயரமும் சோகமும் த[...] ளித்த போதெல்லாம் ஆலிங்கன[...] செய்து கொண்ட 'நித்திராதே[...] அன்று வரவில்லையாம்—தூக்கம் [...] வில்லையாம்! சொல்லியிருக்கிற[...] இந்திய பார்லிமெண்டில் பிப். 2[...] தேதியன்று!

X X X

சட்டவரம்பிற்கு முரணா[...]
விடுதலை செய்க

இந்த முடிவுகள்தான் துணைப்[...] தமரைச் சோக மயமாக-ஆக்கியவ[...] தூக்கம் கொள்ளாது, சிந்தி[...] கடலில் தத்தளிக்கச் செய்தவை.

பாட்னா
கல்கத்தா
பம்பாய்
அலகாபாத்

ஆகிய இடங்களிலுள்ள நா[...] உயர் நீதி மன்றங்கள்தான் மேற்[...] முடிவுகளைத் தந்தவை—பலவழ[...] களை விசாரணைசெய்து கொ[...] ருப்பவை. நீதிமன்றங்கள், அ[...] கூறவையங்கள், தந்த தீர்ப்பு, சி[...] யிலே அடைப்பட்டுக்கிடக்[...] கள்ளன் 'இரத்தினம்,' கட[...] 'கந்தன்', கொலைக்கார 'குண்ட[...] ஆகியோரைப்பற்றியதல்ல. பா[...] காப்பில் பல மாதங்களாக —[...] ஆண்டுக் கணக்காக—ஆட்சியாள[...] அடைக்கப்பட்டுக் கிடக்கும், [...] களைப் பற்றியது.

எந்த ஒரு பிரஜையையும் பு[...] காப்புச் சட்டத்தின் கீழ் மூன்[...] மாதங்களுக்கு மேல் விசாரணை[...] லாமல் சிறையில் வைக்கக்கூட[...]

என்பது புதிய இந்திய அர[...] லமைப்புச் சட்டத்திலுள்[...] ஒருவிதி.

இதை எடுத்துக்காட்டிப் பா[...] உயர் நீதிமன்றம் பாதுகாப்[...] கைதிகள் பலரை விடுதலை செய்[...] இதுபோன்ற வழக்குகள் சென்[...] உள்பட, பலமாகாண உயர்நீதி[...] றங்களில் விசாரணையிலிருக்கின்[...]

இதுதான், துணைப் பிரதம[...] சஞ்சலத்திலாழ்த்தி, தூங்கவிட[...] செய்ததாம்.

அடைபட்டுக் கிடக்கும் [...]

லை, திறந்துவிடுவதென்றால், அதுவும் அக்காரியத்துக்கு நீதி துணை செய்கிறதென்றால், தூக்கமா பிடிக்கும்—நமது சுயராஜ்யத் தலைவருக்கு! ஆகவே, நீதி—நியதியில்லாமல எங்கெங்கோ நுழைகிறதே என்ற எண்ணத்தாலோ என்னவோ, தூக்கத்தை நீக்கி, இரவென்றும் பாராமல்பகலென்றும்நினையாமல், புதுபாதுகாப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். தான் கொண்டுவந்த பாதுகாப்புச் சட்டம் பற்றிக்குறிப்பிடுகையில்தான், அவர் கூறியது 'இரண்டு நாட்கள் எனக்குத் தூக்கம் இல்லை' என்று, சட்ட சபையில் பரிதாபம் பட, வெளியிட்டது.

X X X

சரியாக ஒரு மாதம்கூட ஆகவில்லை —ஒரு நாள் பாக்கியிருக்கிறது, இந்தியா குடியரசு நாடெனக்கோலாகலமாகப் பிரகடனம் செய்து! புது அரசியலமைப்பு ஒன்றைத் தயார் செய்துவிட்டோம், இனி நாங்கள் வகுத்த சட்டம் நமது நாட்டை ஆளப்போகிறது என்று பூரித்துக் கூறி! அதற்குள் அதில் 'ரிப்பேர்'—ஆமாம், வேடிக்கையாக இருக்கிறது, சர்தார் பட்டேல்—அரசியலமைப்பைத் தயார் செய்து நிலை நாட்டிய தூண்களில் முக்கியமானவர் கூறுகிறார்,

"பாதுகாப்புச் சம்பந்தமான சில அம்சங்கள் அதற்கான வகையில் புது அரசியலமைப்பில் வலியுறுத்தப்படவில்லை"

சிறையிலடைக்கப்பட்ட கைதிகள் 'நீதி'க்கு முன் போய் நிற்க, 'நீதி' சர்க்கார்நடவடிக்கையைக் கண்டித்து புது அரசியலமைப்பு ஷரத்தைக் காட்டி, நீதி வழங்கியதும்—நிலை தடுமாறுகிறது, தாங்களே கட்டிக்கொண்ட அரசியலமைப்பில் சரியாக வலியுறுத்தப்படவில்லை! என்று சாக்கும், சந்தர்ப்பப் பதிலும் தயாரிக்கப்படுகிறது, மக்களின் தூதுவர்கள் என்று மார்தட்டிடும் தலைவர்களால்! நேர்மை நீதிபற்றி நேற்றுவரை சங்கநாதம்செய்துவிட்டு, இன்று 'சாண்' இடம் கிடைக்குமா நுழைந்து தப்பித்துக்கொள்ளஎன்று இடம் பார்க்கிறார்கள்.

குடியரசு அரசியலமைப்பில்பிரஜா உரிமைக்கு அளிக்கப்பட்டிருக்கும் இடம் குறித்து, பேசாதாரில்லை —பெருமையாக! காங்கிரஸ்காரர்மட்டுமல்ல, பல அரசியல் நுண்ணறிவாளரும் பாராட்டினர், மக்கள் உரிமைக்காகப்போராடிய "மகாத்மா சீடர்கள்" மகத்தான இலட்சியத்தைச் சட்டமாக்கிவிட்டார்கள் என்று பெருமையாகப் பேசினார்கள்.

கனியைக்கண்டதும், அதன் ருசி அழகு ஆகியவை குறித்து மகிழ்ந்தவனிடம், கனியைஉடைத்துக்காட்ட அது சொத்தையும், பூச்சிகள் நிரம்பியதாகவும் இருந்தால்எப்படியிருக்குமோ அப்படியாகிவிட்டது இன்றையநிலை! ஒருமாதம் — முப்பது நாட்கள்முடியவில்லை! அரசியலமைப்பில் அதற்கான இடம் இல்லை என்று சொல்லிவிட்டு, மக்களுரிமையில் கை வைக்கும், மசோதாவைக்கொண்டு வந்து சட்டமாக்கியிருக்கிறார்கள்.

உலகம்காணாதஉன்னதக்காட்சியை காட்டிவிட்டனர்!

"குடியரசு அரசியல் பிரகடனம் செய்யப்பட்ட கொஞ்சநாட்களுக்கெல்லாம் இத்தகைய மசோதாவைக் கொண்டுவருவது ஒருஉற்சாகம் நிரம்பியவேலையில்லை!"

உற்சாகம் நிரம்பியதில்லையாம்; வேண்டாவெறுப்புடன் வேதனை இடிக்கக் கொண்டுவருவது தானாம்! ஓலமிட்டவர் வேறு யாருமல்ல,'சாட்சாத்' பட்டேல் அவர்கள்தான்! உற்சாகம் நிரம்பியதல்ல புது அரசியலமைப்பு அமுலுக்கு வந்த உடனடியாக "இத்தகைய" மசோதா கொண்டுவருவது என்று திருவாயால் வெளியிட்டுக் கொண்டே கொண்டு வந்து, சட்டமாக்கிக் கொண்டுள்ளார்.

X X X

தகவல் அறிவிக்காமல் கைது செய்யப்பட்ட எவரையும் காவலில் வைக்கக்கூடாது. கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் கூடிய விரைவில தெரிவிக்கப்பட வேண்டும். கைதுசெய்யப்பட்ட நபர்தனது விருப்பப்படி தனது சார்பில வாதாடவோ, ஆலோசனை பெறவோ வக்கீல்வைத்துக் கொள்ள உரிமையளிக்கவேண்டும்.

மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு காவலில் வைக்கக்கூடாது. அப்படி வைக்க வேண்டுமென்றால்,

உயர்நீதிமன்ற அந்தஸ்துடைய நீதிபதிகளைக்கொண்ட ஆலோசனை போர்டின் அனுமதி பெறவேண்டும்.

இது இந்திய அரசியலமைப்பில் பிரஜா உரிமைகள் பற்றிய 22-வது ஷரத்தாகும். மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு காவலில் வைப்பது சட்டவிரோதம் எனக் கூறப்பட்டிருப்பதன் மீதே, அடைபட்டுக்கிடந்த காவல்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என 'நீதி' தீர்ப்புவழங்கியது.

அத்தீர்ப்பைக் கண்டதும்தான் தனக்கு 'தூக்கம் வரவில்லை' என்று சொல்லி, அவர்களை மீண்டும் காவலில் வைப்பதற்கான வகையில் சட்டம் செய்து கொண்டுள்ளார்—துணைப் பிரதமர், உள்நாட்டு மந்திரி, பட்டேல்!

விசாரணையின்றிப் பலர், இந்தியத் துணைகண்டத்தின் பல பாகங்களிலும் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த நடவடிக்கைக்கு அன்றுமுதல் இன்றுவரை ஆளவந்தார் காட்டும் காரணம், 'அவர்கள் கம்யூனிஸ்டுகள்! சுதந்திர வாழ்வில் தொல்லையைச் சிருஷ்டிப்பவர்கள்! நாசவேலைக்காரர்கள்!' என்பதுதான். இந்தக் காரணங்களின் மீதே, காங்கிரசார் ஆட்சிப்பீடம் ஏறிய அப்போது பாதுகாப்புச் சட்டம், பராமரிப்புச்சட்டம் என்றுகூறி இவர்களைப் பிடித்துச் சிறையில் போடுவதற்கான சட்டங்களை வகுத்துக் கொண்டனர்.

நாட்டில் அராஜகமும், அட்டூழியமும் நடைபெறுவதை எந்த அரசாங்கமும் சகித்துக் கொள்ளாது—சகிக்கவும் முடியாது! நாட்டுவாழ்வில் தீமையைச் சிருஷ்டிப்பவர்களை, அடக்குவது கூடாது என்று யாரும் கூறமாட்டார்கள். தர்மராஜ்யமாயிருந்தாலும், இராமராஜ்யமாயிருந்தாலும், சட்டமும் ஒழுங்கும் நீதியும் நியதியும் நிலைநாட்டப்பட்ட—போதிய வசதியும், அதிகாரமும், ஆட்சிபீடமேறியோர் வசம் இருக்கத்தான் வேண்டும்—இதையெவரும் மறுக்க மாட்டார்கள்.

அதிகாரம் இல்லாத ஆட்சியும், வசதியில்லாத அரசாங்கமும்—நீர்க்குமிழிகள்தான், நிலைக்கமுடியாதவை

தான்! வயலுக்கு வரம்பு—பாம்புக்கு தடி—தொல்லைக்கு சிறை, இவை இருக்கக் கூடாது, என்று எவரும் கூறிவிட முடியாது.

இந்த வகையில், இன்றைய ஆளவந்தார் — இந்தச் சலுகைகள் எதுவும் இல்லாதவர்களல்ல!

கலவரக்காரர்கள் படமெடுத்தாடும் பாம்பானால் பாய்ந்து அடக்க போலீசார் உண்டு! சட்டத்தைமீறி, தவறு செய்தால், நீதிவழங்கி தண்டித்துச் சிறையில்தள்ள நீதிமன்றங்கள் இருக்கின்றன! சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கப் படைபலம் இருக்கிறது—போலீஸ், ரிசர்வ் பட்டாளம், தடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கி, ஜெயில்! எல்லாம் இருக்கின்றன—வெள்ளையன் காலத்தைவிடப் அதிகமான அளவில்! இவைகளுக்காக, காங்கிரஸ் ஆளவந்தார் அந்நிய ஆட்சியின் காலத்திலிருந்ததைவிடப் பன்மடங்கு அதிகமான தொகை செலவழிக்கின்றனர்!!

எனினும் பாதுகாப்புச் சட்டம் — விசாரணையில்லாமல் சிறை!

விசித்திரமான இந்தவேடிக்கை— எவரையும் சிந்திக்கவே செய்யும்.

கலவரக்காரர்கள், கம்யூனிஸ்டுகள், இந்திய உபகண்டத்தில்வாழும் 33 கோடி மக்களில் ஒருசில ஆயிரம் பேர்தானிருப்பர்! — அந்த ஆயிரங்களை அடக்க லட்சக்கணக்கில் வசதிகளிருக்கின்றன!

இருந்தும், விசாரணையில்லாமல் சிறை! ஒருவனைச்சந்தேகப்பட்டதும் பிடித்துச் செல்லவசதி — சட், சட்டம்!

ஆட்சி நடைபெறுகிறது, அங்கு திறமையான நிர்வாகம் நடத்தப்படுகிறது, அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுகிறது என்பதுதான் ஒரு ஆட்சிக்குரிய லட்சணங்கள் — சர்க்கார்என்றவார்த்தைக்குரியபொருள்.

போலீஸ், படைபலம் நீதிமன்றம் இத்தனையிருந்தும், போதவில்லை. எவன் என்கண்ணுக்குக்கெட்டவனாகத்தெரிகிறானோ அவனைப்பிடித்துப் போடுவேன்' என்று கூறினால், அதற்கு நல்லசர்க்கார் என்றுபெயர்தர எவரும் நாணுவர்—எதேச்சாதிகார தர்பார் என்று சொல்லவே செய்வர்!

இன்றைய ஆளவந்தாரோ ஆட்சிப்பீடம் ஏறிய அன்று முதல் அடக்குமுறைப் பாதையிலேயே செல்லுகின்றனர். குடியரசுச்சட்டம் ஒன்றுசெய்துகொண்டு கொஞ்சநாட்களுக்கெல்லாம் அடக்குமுறைச்சட்டம்ஒன்றைக்கொண்டுவருகின்றனர்.

பட்டேல் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ள மசோதாவில்,

> காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளைக் கைது செய்தது சரியா என்று பரிசிலனை செய்ய அரசியலமைப்பில் கூறப்பட்டிருப்பதையொட்டி, நீதிபதிகள் அடங்கிய ஆலோசனை போர்டு (Advisory Board) நியமிக்கப்படும்.

என்றுகூறப்பட்டிருக்கிறது. இதைக் கண்டதும், என்னதான் இருக்கட்டும், காங்கிரஸ் ஆட்சியென்றால் ஆட்சிதான்! ஒருவனைப் பிடித்துச் சிறையில் அடைத்து மாதம் மூன்று ஆவதற்குள் அவனை அடைத்தது சரியா, தவறா என்று காண ஆலோசனை போர்டு — அதுவும் நீதிபதிகள் கொண்டதாக — அமைப்பது என்று கூறப்பட்டிருக்கிறதே. நீதி—கைது செய்யப்பட்டவர்களுக்குக் கிடைக்கவழிசெய்யப்பட்டிருக்கிறதே! எனினும், எதிர்க்கட்சியினர் ஏன் தூற்றுகின்றனர். இவர்கள்வேலையே காங்கிரஸ் சர்க்காரைத் தூற்றுவதுதான் என்று சொல்லத் தோன்றும்—நியாயமாகத் தானே இருக்கிறது என்றுநினைக்கத்தோன்றும்!

இரண்டு நாட்கள் தூக்கமில்லாமல் தயாரிக்கப்பட்டதாயிற்றே — இதற்கான தந்திரவித்தைகூட இல்லாமலா இருக்கும்.

அரசியலமைப்பில் கூறப்பட்டிருப்பதுபோல ஆலோசனை போர்டு அமைத்து 'நீதி'பெறக் காவல் கைதிகளுக்குவாய்ப்புதரப்பட்டிருப்பது உண்மைதான் — மறுக்கவோ, மறைக்கவோ நாம் விரும்பவில்லை!

ஆனால் விஷயமும், சர்க்காரின் சட்டஷரத்தும் அதோடு நின்றுவிடவில்லை. அதற்குக்கீழே இன்னொரு ஷரத்தும் இருக்கிறது, காங்கிரஸ் சர்க்காரின் பாதுகாப்புச்சட்டத்தில். அதன்படி,

> "அதிகாரிகள், ஆலோசனை போர்டில் தாங்கள்கைதுசெய்ததற்கான காரணங்களை விளக்கலாம், ஆலோசனை போர்
> விரும்பினால், சர்க்கார் சார்பி
> காவல்கைதிகள் நேரிலே
> அல்லது தங்கள் வக்
> மூலமோ தங்களது வாதத்
> ஆலோசனைபோர்டாருக்குத்
> விக்கமுடியாது.

'நீதி' எப்படி—ஆட்சியாளரின்
மைப்பாதை, 'தர்மராஜ்யவழி' எ
படியிருக்கிறது! அகில உலகிலு
இதுபோல காணமுடியுமா!

X X X

ஆலோசனை போர்டு அமைத்
அரசியலமைப்பில் கூறப்பட்டுள்
பிரஜா உரிமைகளை மறுக்காத ந
பதாகப்பேசும் "பெரியவர்கள்
போக்கு, புதுமசோதாவில் உள்
இன்னொரு ஷரத்துமூலம்,எவ்வள
எதேச்சாதிகாரம் நிறைந்தது எ
விளங்கும்.

புது பாதுகாப்புச் சட்டத்
துள்ள இந்த அம்சம் ஒரு பு
பாணம்! புறப்பட்டுக் கொண்
கும் பாசிசமும், முதலாளித்
மும் பவனிவர வழிவகுக்கும்பா
பத்திரிகைகள், உலகத்தை அறி
கண்கொண்டு பார்த்து மக்களுக்
அறிவிப்பவர்கள்— ஆகியோருடை
சுதந்திரத்தை, சூறாவளி கொள்
செய்யும் சூது நிரம்பிய செயல்!

> "வெளிநாட்டு வல்லரசுக
> டன் இந்தியாவுக்குள்
> தொடர்பு குறித்துக்குரோத
> ஊட்டும் வகையில் பேசின
> அவர்களைக் காவலில் வை
> கலாம்."

இந்திய நாடு, வெளி நாட்டு
கொண்டிருக்கும் உறவு நி
குறித்து 'குரோதம்' உண்டாக்
நிலையில் பேசினால், பிடித்துப் போ
லாமாம்! 'குரோதம்' என்பது ப
எது அது, எப்படிப் பேசுதல்:ச
விரோதம் என்பது குறித்து வி
கம் எதுவுமில்லை — விளக்கமில்
யென்றால் விருப்பம் போல் செய்
கொள்ளலாம் என்ற எண்ணம்
என்னவோ!

இந்திய சர்க்கார்கொள்ளும் உ
குறித்து இந்தியப்பிரஜை பே
கூடாதாம்! அமெரிக்காவிடம்
சை கேட்பதைப் பற்றிக் பே
கூடாதா, ஏன் நாட்டை வெளிநா

தலாளித்துவத்துக்கு அடிமை க்குகிறீர் என்று கேட்பது குற் ம், ரஷ்யாவுடன் தகராறு கூடாது ன்று திண்ணைப் பேச்சாளர்கள் சிக்கொண்டால் சட்ட விரோ ம்—விளக்கமில்லை எனினும் விப மாகஇருக்கிறது அந்தஷரத்து!

"அப்படி மீறிப் பேசினால அவர்களைக் காவலில் வைக்க லாம். அவர்கள் பற்றி ஆலோ சனை போர்டுக்கு அறிவிக்க வேண்டியதில்லை."

ந்தஷரத்து மேலும் தரும் தகவல் து, இப்படிப்பட்டவர்கள் விஷ த்தில் ஆலோசனை போர்டு தின கூடக் கிடையாதாம்! ஏன்!- டகத்தான் தோன்றும், சுய நினை ம், சுயேச்சை ஆசையும் கொண்ட களுக்கு.

கம்யூனிஸ்டுகளால் ஆபத்து நாட் கு, ஆகவேதான் இச்சட்டம்; ற்காக இரண்டுநாள் தூக்கமில்லை ன்று சர்தார் பட்டேல் சொல்லு ர்—தனது வசம போலீஸ், டபலம் ஆகியவைகளை வைத்துக் ண்டு!

கம்யூனிஸ்டுகள் சிலர்; மக்கள் ர்-எனினும் இச்சட்டம் கொண்டு ப்படுகிறது, அவசியம் அவசரம் ற போலித்திரையுடன்!

ட்டம் கம்யூனிஸ்டுகளை மட்டு ல, நாடு முழுவதையும் கட்டுப் த்துவதுதான். எவர் மீதும், ப்படலாம், அடக்குமுறை ு!

ாங்கிரஸ் இன்று கரைந்து வரு து—கரைத்துப்போன மூதாட்டி- விட்டது—முற்போக்குச் சக்தி எதிர்க்கமுடியாது தன் மூல ம் இழந்துவருகிறது!

ட்சியைக் காப்பாற்ற, எதிர்க் சிகளை அடக்கவேண்டும் என்ற சையில், அமைதி என்ற திரை ட்டுக்கொண்டு, அடக்குமுறை அவிழ்த்துவிட, இன்றைய ஆள தார் பாதையமைத்துக்கொள் —பயன்படாது, பலன் தராது!

ட்டில் கட்சிகள் மட்டுமல்ல, ளும் இருக்கிறார்கள் — மறந்து க் கூடாது ஆளவந்தார், மக்கள் மகத்தானது என்பதை.

✻

"பொன்முடி"

★

கவிஞர் பாரதிதாசனின் சிந்தனைச் சோலையிலே பூத்த 'எதிர்பாராத முத்தம்' திரைப்படமாக உருவாக்கப் பட்டிருக்கிறது சேலம் மாடர்ன் தியேட்டர்சாரால். தமிழர் பண்பாடும், காதல் சுவையும் நிறைந்த கவிஞரின் எண்ணங்களை காட்ட நல்ல முயற்சி எடுத்துக் வெற்றியடைந்துவிட்டனர் பட நிர்வாகிகள்.

பொன்முடி—பூங்கோதையின் அத்தான். இளமையிலிருந்தே சேர்ந்து திரியும் அந்த ஜோடிப் புறாக்களின் இன்ப வாழ்வில், எதிர்பாராத சூறாவளி வீசுகிறது. பொன்முடி, வடநாட்டுக்குச் செல்கிறான் வாணிபம் நடாத்த. வழியில், அநாகரீக கபாலிகர் கூட்டம் வழி மறிக்கிறது—தமிழ் இரத்தம் கொதிக்கிறது — பொன்முடி அகப்பட்டுக் கொள்கிறான். அத்தானைத் தேடி வரும் பூங்கோதைசெய்தியறிந்ததும், வணிகருடன் செல்கிறாள். போர் நடக்கிறது. அநாகரீகக் கூட்டத் தலைவன் அழிகிறான். பொன்முடி—பூங்கோதை வாழ்க்கைப் பயணம் துவங்குகிறது. இதுதான் கதைச் சுருக்கம்.

'மக்களுக்கு இதுதான் பிடிக்கும்' என்று சொல்லிக்கொண்டு கட்டுக் கதைகளும், கருத்துக் கொவ்வாத நிகழ்ச்சிகளும் நிறைந்த படஉலகப்பாதையிலிருந்து, பண்டைப் பெருமை, அதன் அழகு நிறைந்த படங்களைத் தயாரிக்கும் பாதையில், ஒரு நல்லவெற்றியைச் சம்பாதித்துவிட்டனர் மாடர்ன் தியேட்டர்சார்.

'பொன்முடி'யின் வசனங்கள், வளர்ந்துவரும் தமிழின் சின்னம். ஒவ்வொன்றும் பொறுக்கு மணிகள். விந்தியத்தின் விளிம்பிலே குமரியின் முனையிலே......' என்ற எழுத்து நம்மையே ஒரு சிலிர்ப்பு சிலிர்க்கச் செய்கிறது. படத்தின் முற்பகுதி வசனங்களைச்சலகண்டபுரம் தோழர் ப. கண்ணனும், பிற்பகுதி வசனங்களை திருவாரூர் தோழர். மு. கருணாநிதியும் எழுதியுள்ளனர் என்று அறிகிறோம். இருவரும் நமதியக்க முன்னேடும் வீரர்கள்.

டைரக்டர் டங்கன்—பொன்முடி தமிழ் மக்களுக்கு நன்றாக அறிமுகம் செய்து விட்டது. முத்தக் குளித்தலும், காதல் காட்சியும் நினைவைவிட்டு அகலாது.

நடிகர்கள் பொதுவாகத்திறப்பட நடித்துள்ளனர். மொத்தத்தில் மாடர்ன் தியேட்டர்சாருக்கு 'பொன்முடி,' ஒரு பொன்முடி—புகழைத் தருவதில், மக்கள் மன்றத்தின் பாராட்டைக் குவிப்பதில்! ✻

நம்முடையதல்ல

"விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் செயல் திறன்வாய்ந்த ஸ்தாபனமாகத் திகழ்ந்து வந்தது. பதவிக்கு வந்தபின் இப்போது அது ஒரு செயலற்ற ஸ்தாபனமாகத் தேய்ந்து வருவது கண்கூடு. பொது ஜனங்களுக்கும் காங்கிரஸிற்கும் முன்பு இருந்து வந்த நெருங்கிய தொடர்பு இப்போது அறவே மறைந்துவிட்டதென்றே கூறலாம்.

சென்ற இரண்டரை ஆண்டுகளில் காங்கிரஸ் தனக்கிருந்து வந்த அற்புதப் பொதுஜன ஆதரவுச் சக்தியை இழந்து தானும் சக்தி இழக்கலாயிற்று. பொது ஜனங்களைப் பற்றிய ஞாபகமாவது காங்கிரசிற்கு இப்போது இருக்கிறதா என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. இந்த நிலைமை இன்னும் சிறிது காலம் நீடிக்குமானல் ஸ்தாபனத்தைத் தேடிப் பார்க்க வேண்டிய அவசியம் நேர்ந்தாலும் ஆச்சரியமில்லை."

ஆனந்த விகடன்
26-2-50

"ஒரு காலத்தில் —ஏன், மூன்று வருஷத்துக்கு முன்னால்—காங்கிரஸ் அபேட்சகர் என்று லாந்தர் கம்பத்தை நிறுத்தினாலும் ஜெயிக்கும் நிலைமை நாட்டில் இருந்தது. காங்கிரசின் பெயருக்கு அவ்வளவு மகிமை இருந்தது. அவ்வளவு மந்திர சக்தி இருந்தது. அந்த மந்திரசக்தி இப்போது போய்விட்டது என்பது பிரத்யட்சமான உண்மை.

தலைவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஊழியர்களில் பெரும்பாலோர் தங்களுடைய சொந்த நன்மையைத் தேடிக்கொள்வதிலும், தங்களுடைய தியாகத்தின் கூலியைச் சம்பாதித்துக் கொள்வதிலும் முனைந்து ஈடுபட்டிருக்கிறார்கள்.!!

கல்கி
26-2-50

அறிவாலயப் பணி

காஞ்சிபுரத்தில், பச்சையப்பன் கல்லூரி நிறுவுவதற்கான முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தோழர் கந்தசாமி அவர்கள், தன் முழுச் சொத்தான ஐம்பதாயிரம் ரூபாய்களை கல்லூரி அமைக்க உதவித் தொகையாக அளித்திருக்கிறார் என்ற செய்தியை அன்பர்கள் அறிவர்.

இந்த ஆண்டிலேயே, கல்லூரியை அமைத்து, கண்டுகளிக்க வேண்டும் என்ற பேரார்வத்துடன், அவர், கல்லூரி அமைப்புக் கமிட்டியினருடன் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

செங்கற்பட்டு எம். வேதாசல முதலியார் அவர்கள் தலைமையில் இதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

கல்லூரி அமைப்புக்காகப் பல அன்பர்கள் அன்பளிப்பு அருளியிருக்கிறார்கள் விவரம் கீழேதரப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஜி. கண்ணப்ப முதலியார்	5000-0-0
திரு. சி. வி. திருவேங்கிடப் பிள்ளை சி. வி. கண்ணுசாமிப் பிள்ளை சி. வி. துரைசாமிப் பிள்ளை	2500-0-0
திரு. வெ. சம்பந்தமூர்த்தி செட்டியார் சபாபதி செட்டியார்	2500-0-0
திரு. எம். அண்ணுமலை முதலியார் நடேச முதலியார்—சிவசங்கர முதலியார்	2500-0-0
திரு. சி. அம்பலவாண முதலியார்	1500-0-0
திரு. ஓ. மு. குப்புசாமி செட்டியார் அப்பாசாமி செட்டியார்	1500-0-0
திரு. க. சொக்கலிங்க முதலியார்	1000-0-0
திரு. வேலாயுத முதலியார் வடிவேல் முதலியார்	1000-0-0
திரு. எம். வி. கிருஷ்ணசாமி முதலியார்	1000-0-0
திரு. க. மு. பச்சையப்பன்	1000-0-0
திரு. டாக்டர் பி. சீனுவாசன்	1000-0-0
திரு. சின்னக்குழந்தை முதலியார் அண்டு சன்ஸ்	1001-0-0
காளப்ப முதலியார் முத்தமிழ் அச்சகம்	1001-0-0
திரு. முருகேச முதலியார்	1000-0-0
திரு. எம். வி. எம். பச்சையப்ப முதலியார்	1125-0-0
திரு. ஆ. மு. பழனிச்சாமி முதலியார்	1000-0-0
திரு. எம். கே. என். சோமசுந்தர முதலியார்	1000-0-0
திரு. கே. குப்புசாமி முதலியார்	1000-0-0
திரு. மு. இரங்கமன்னர் செட்டியார்	1000-0-0
திரு. ஆ. சண்முக முதலியார் வ. கிருஷ்ணசாமி முதலியார்	1001-0-0
திரு. கா. சு. முனுசாமி முதலியார்	1001-0-0
திரு. வி. ஆர். கே. கோவிந்தராஜ முதலியார்	1001-0-0
திரு. கன்னியப்ப முதலியார்	501-0-0
ஹெட்மாஸ்டர் கன்னியப்ப முதலியார் மூலம் வசூல்	250-0-0
திரு. கந்தசாமி முதலியார் மூலம் வசூல்	716-0-0
திரு. பி. எஸ். கே. ஈசுரசா	3000-0-0

கமிட்டியார், நகரில் மேலும் வசூல் வேலைக்காக முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர்.

நகரில், பல்வேறு வியாபாரச் சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கும் 'மகிமை'த் தொகைகளிலிருந்து இந்த அறிவாலயப் பணிக்கு உதவி தரவேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது.

நகரசபை உறுப்பினர்கள் மூலம், வீடுதோறும் சென்று சிறு சிறு தொகையாவது வசூலிப்பது என்ற யோசனையும் இருந்துவருகிறது.

வசூல் கமிட்டியாருக்கு ஊக்கமளித்து, இந்த அறத்தில் அனைவரும் தத்தமது பங்கினைச் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

கல்லூரிக்கான கட்டடம் அமைக்கத் தக்கதோர் இடம் குறிப்பிட்டிருக்கிறது. பச்சையப்பன் டிரஸ்ட் தலைவரும் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தலைவரும், இடத்தைப் பார்வையிட்டுத் தங்கள் ஒப்புதலைத் தெரிவித்துள்ளனர்.

கட்டடம் அமைவதற்குள்ளாகவே வாடகைக் கட்டடம் ஒன்றில், கல்லூரியை உடனடியாகத் தொடங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அன்பர்களின் ஆதரவு எவ்வளவுக்கெவ்வளவு விரைவிலே கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளியில் படித்து, இன்று பல்வேறு துறைகளிலே உள்ள அன்பர்கள் அனைவரும், இந்த முயற்சியைத் தங்கள் சொந்தக் காரியம்போல் எண்ணி, களிப்புடன் கடமையைச் செலுத்தவேண்டுகிறோம்.

—()—

சொல்லும் செயலும்!

"ஏழைகளின் இன்பபுரியான ரஷ்யாவை, அரிவாளையும் சம்மட்டியும் கொடியாகக் கொண்டு விவசாயிகளாலும் தொழிலாளிகளாலும் ஆட்சி செய்யப்படும் அந்நாட்டை எல்லோரும் விரும்பவே செய்வர். சூரர்களாலும் சுண்டெலிகளாலும் அமைக்கப்பட்டிருக்கும் அந்நாட்டரசியல் முறை சர்வ உள்ளத்தையும் ஈர்த்துவிடுகிறது. வாழையடி வாழையாய் வந்த பழைய முறைகளை அடியோடு மாற்றி புது வாழ்க்கையை நிர்மாணித்துள்ள அம்மகாசக்தியை அறிய நம் மனம் பேராசைப்படுகிறது"

பிரதமர் நேரு
(1932ல்)

"ஸ்டாலின் கிராட் சண்டை என்ற ரஷ்ய சினிமா படத்தை சென்னைநகரில் காட்டக்கூடாதென்று போலீஸ் கமிஷனர் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார். மேஜர் ஜெனரல் ருத்ராவின் தலைமையில் காட்டப்படவிருந்த இப்படம் தடையுத்தரவால் காட்டப்படவில்லை"

(1950 பிப் 22)

நாடோடி விஞ்ஞானி

"வாணன்"

...விலி! நம் நாட்டைப் பற்றி
...ரைக்கிறானே!"

...னி! நம் உப்பைத்தின்று
...நம்மையே ஏசக் கற்றுக்
...டிருக்கிறான்!"

...ஒரு விஞ்ஞானி? வாழ
...த்த நாட்டை மறந்த இவனை
...பிறவியில் சேர்ப்பதே தப்
...!"

...கர்வம் பிடித்தவன்! தனக்
...வேலையை விட்டு விட்டு நாட்
...ரசாங்க வேலைகளை குறை
...ம்பித்து விட்டான்!"

...குறை கூறமாட்டான்? அவ
...யூதன்தானே!"

...படிப்பட்டனுக்கு, யார் விஞ்
...சங்கத்தில இடம் கொடுத்

...னை விஞ்ஞான குழுவிலி
...வெளியேற்ற வேண்டும்!"

...உடனேயே ராஜினமா அனுப்பி
...னே!'

...மேதை! அவன் விலகிக்
...ால் ஜெர்மனியில் விஞ்
...செத்துவிடுமோ?"

...ன் விலகியதைப்பற்றி இங்கு
...லைப்படுகிறார்கள்?'

...லைப்படாதது மாத்திர
... இந்த நாட்டில் அவன்
...ல் வாழ்வதை பார்த்துவிட

* *

...மொழிகள் வரிசைகளாக
...பட்ட அதே நேரத்தில்
...பற்றி பிரெஸெல்ஸ் நகரி
...வெளியான பத்திரிகையின்
...கூறியது.

...றைய விஞ்ஞான உலகமே
...டைய சேவையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பிரஞ்சு அரசாங்கம் அவனுக்கென்று தனியான, உயர்ந்த பேராசிரியன் பதவியை உண்டாக்கி விட்டு, அவனுடைய வரவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. ஸ்பானிஷ் அரசாங்கம் அவனை அழைக்கிறது. ஹாலந்தும் பெல்ஜியமும் அவன் வருகையை ஆவலுடன் எதிர் நோக்குகிறது. இங்கிலாந்து அவனுக்கு விரைவில் அதிகாரபூர்வமான அழைப்பை அனுப்பும். அமெரிக்காவிலிருந்து ஆயிரக்கணக்கில் தந்திகள் அவன் மேஜையில் குவிந்தவண்ணமிருக்கிறது. ஜெர்மன்நாடு அவனை வெறுக்கிறது. ஆனால் உலகம் பூராவும் அவனை வரவேற்கிறது!"

> "இன்றைய உலகில் முக்கியமான மூவர் யார்?"
>
> ஒரு நிருபர் கேட்டார்!
>
> "விஞ்ஞானிகளில் ஐன்ஸ்டைன், அரசியலில் ஸ்டாலின், நாடகத்தில் நான்!"
>
> பதில் தந்தார் பேராசிரியர் பேர்னட்ஷா.
>
> ஷா, ஸ்டாலின் இருவரும் மக்களுக்கு அதிகம் அறிமுகமானவர்கள். ஐன்ஸ்டைன்........வரலாறு பலருக்குத் தெரிந்திருக்காது. குடத்து விளக்கான அக்'குணாள'ரின் வாழ்க்கைச் சித்திரம்தான் இது.

X X

அவன் என்ன செய்தான் தெரியுமா? "ஏ, ஜெர்மானியர்களே உங்களுக்காக நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன். உங்கள் நலனுக்காகத் தானே என் வாழ்நாளில் இதுவரைக்கும் செலவிட்டேன் உங்களுக்கு நான் செய்த துரோகம் என்ன? நீங்கள் செல்லும் அரசியல் பாதைதவறானது என்று சொன்னேன். மனித தர்மத்திற்கு ஒவ்வாதது என்றுரைத்தேன். இதுவா குற்றம். தனிமனிதனுக்கு பேச்சுரிமைகூட கிடையாதா? ஜெர்மானியர் மனித சமுதாயத்தின் நாகரீக விளக்காயிற்றே. அவர்களா இப்படி மாறிவிட்டனர்!

ஐரோப்பிய கண்டமே, உன்னை விட்டேப் போகிறேன். உலகக் கோடியில் நான் வாழ் நாளை கழிக்கிறேன்! என்னால் முடிந்த வரையில் விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவிபுரிகிறேன். இனிமேல் உன் கதி என்ன ஆகுமோ?" இப்படியெலாம் அவன் கூறவில்லை. வசவு மொழிகளை கேட்டுத் தாளாமல் ஜெர்மனியை விட்டு புறப்பட்டவன் நேராக அமெரிக்காவிற்குப் போய்விட்டான்! அட்லாண்டிக் பெருங்கடலில் கப்பல் தளத்தில் நின்று கொண்டு ஐரோப்பாவை பார்த்த பொழுது இதைத் தவிர அவன் வேறென்னதான் கூற, நினைத்திருக்கமுடியும்?

X X X

இன்றைய உலகத்தில் மிகச்சிறந்த சிந்தனையாளனாக போற்றப்படும் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனுடைய வாழ்க்கையில் 1932-ம் ஆண்டில் நடைபெற்ற சம்பவம்தான் நாம் மேலே குறிப்பிட்டுள்ளது. அவனுடைய வாழ்வில் ஐம்பத்திமூன்று ஆண்டுகள் ஐரோப்பாவில் கழிக்கப்பட்டன. அதற்குள் அவன் அடைந்த துன்பங்கள் ஏராளம். மனித சமுதாயத்தை வாழ்விக்க பாடுபடுபவர் எவரும் அடைந்த இடர்பாடுகளையே அவனும் பெற்றான். கடைசியாக துன்பச்சூழலிருந்து தப்ப ஐரோப்பாவை விட்டே அகன்றான்!

X X X

அவர் பிறந்தது 1879, மே மாதம் 14-ம் தேதி. பரலோகத்தைப் பற்றி இகத்தில் கூறுவதற்கு அவர் பிறக்காத காரணத்தால் அவர் பிறக்கும் பொழுது உலகத்தில் எந்த விதமான அதிசயமும் நிகழவில்லை! ஏழ்மையை கட்டியணைத்துக் கொண்டு வாழ்ந்தனர், பெற்றோர்கள். தந்தையார் ஹெர்மன், மின்பொறிபொருள்

(5-ம் பக்கம் பார்க்க)

மலர்ப்போர்

தில்லை வில்லாளன்

"அது முடியாது!"

"காரணம்...?"

"உங்களை சண்டாளர்களாக ஆண்டவன் பிறப்பித்தது......?

"அதே ஆண்டவன்தான் இப்பொழுது எங்களை அனுப்பியிருக்கிருர்"

கேலி கலந்திருந்தது சேரன் குரலில்.

"வாயாடி நாய்......பறக் கழுதை வாயை மூடுடா! சாண்பயல், சட்டம் பேசுருன்...அடிவிழும்! எல்லோரும் ஓடிப்போங்கடா"

"ஓய், அதிகம் பேசவேண்டாம். எங்களை சேர்த்துக்கொள்ள முடியாது என்று எழுதிக்கொடும் நாங்கள் போய்விடுகிருேம்"

"எல்லாம் உங்க அப்பன் சொல்லிக் கொடுத்த பாடமா...? அதெல்லாம் முடியாது. நான் எழுதிக் கொடுத்தால் சர்க்காருக்கு அனுப்பி கிராண்டில் மண்ணைப் போடலாமான்னு பார்க்கிருன் உங்க அப்பன்"

சேரன் மீறினன். பதின்மரும் உள்ளே சென்றனர். தலைமையாசிரியர் எதையும் செய்ய முடியவில்லை. அவர்களை ஒன்றும் பேசாமல் சேர்த்துக் கொண்டார். ஊர்ப்பெரியவர்களிடம் வேதாந்தம் பேசித் தப்பித்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டார்.

நம்நாட்டு சம்பிரதாயம் ஒரு பந்து...எப்படி உருட்டிவிட்டாலும் வித்தியாசம் தெரியாது! அது ஒரு சுழலும் பொம்மை. சமூகம் என்ற ஏணையில் தூங்கும் மக்கள் எனும் இளங்குழவியை அறியாமைத் தூக்கத்திலாழ்த்த சம்பிரதாயப் பொம்மையை மேலே கட்டிவிட்டு விருப்பப்பட்ட பக்கம் சுற்றிவிடுகிறார்கள். சுப்பிரமணியருக்குத் தெரியும் அவர்களைச் சேர்க்காவிட்டால் வருந் தொல்லைகள்......ஆகவே படிந்துவிட்டார்.

அன்று சேரனுக்கு சேரியிலே அமோகமான வரவேற்பு ... அன்று பாக்கியம் பதினெரு வயதுப்பெண். அவனது துணிகரமான போக்கைக் கண்டு சேரன்மீது ஒருபாசம்பிறந்துவிட்டது. அவள் எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். சின்ன வயதில் அவன் செய்த எவ்வளவோ துன்புறுத்தல்களையும் உதாசினத்தையும் மறந்தாள். எடுத்ததற்கெல்லாம் தலையிலே குட்டுவான். விம்மி,விம்மி அழுவாள். ஆனல்வெளியில்சொல்ல மாட்டாள், தாய்தான் இறந்துவிட்டாள். தந்தை எப்பொழுதாவது அவள் அழுவதைப்பார்த்துக்கேட்டுவிட்டால் எதையாவது புளுகிவிடுவாள். சேரனைக் காட்டிக்கொடுக்க அவள் மனம் என்றுமே துணிந்ததில்லை.

என்னைத் திட்டம்

ஒருநாள் நல்ல நில வொளியில் கண்ணுமூச்சு விளையாட்டு விளையாடினர்கள். பாக்கியம் இருளிலே போய் ஒளிந்துகொண்டாள். அதே இடத்தில் சேரனும்ஒளிந்துகொள்ள

வந்தான். பாக்கியம் அங்கிருந்த
தெரியவில்லை. ஆனல் அவனைக் க
டிப்பிடித்துக்கொண்டாள் பாக்கியம்

"சீ, கருப்பி.........என்னைத்தொ
டாதே" என்று சீறினன்.

அவள் தேம்பித் தேம்பியழு
தாள்.

"கருப்பி, ஓடு......உன்னை ஆ
டத்திற்குச் சேர்த்துக்கொள்ளமு
யாது"

நெருப்பில் எண்ணெய்
தெளித்தான்.

அவள் அழ, அழ........

அவன்மனம் குழைந்தது. நெஞ்
நெகிழ்ந்தது. பரிதாபத்தால் மட்
டமல்ல, பயத்தாலும்!

பாக்கியம் அவனுடைய தந்
யிடம் சொல்லி உதை வாங்கிவை
பாளோ என்ற அச்சத்தாலும்அவ
அழுகையைநிறுத்தவேண்டுமென
பார்த்தான். அவளைத் தழுவி
கொண்டு தேற்றினன். அவ
பாவாடை முனையினலே அவள
கண்களைத் துடைத்து அவ
அமைதிப்படுத்தினன். பாக்கிய
அவன்மீது சாய்ந்துகொண்டேசி
சினள்.

"சேரா, என்னைத்திட்டாதே இ
மேல்.......எனக்கென்னமோ உ
ஞேடேயே இருக்கணும்போலிரு
நீமட்டும் என்னை குட்டியும் தி
யும் விரட்டினியே...... என்னை
பிடிக்கவில்லையா........?"

குழந்தை உள்ளம் பேசி
"இனிமேல்இல்லை......அடிக்
இல்லை......அப்பாகிட்டே சொ
விடாதே"

இளமை பதில் கூறிற்று!

அந்த இருளில் குழந்தை நெஞ் ...ங்கள் இணைப்புத்திட்டம் போட் ...ன.........மற்றபிள்ளைகள் கூறிய ...டியே அங்கு தேடிவந்துவிட்டனர்.

இந்தப் பழைய நாள் நிகழ்ச்சி ...வள் மனதில் பட்டென்று தைத் ...து!

மனம் சில சமயங்களில் பீரங்கி ...வடியும், குண்டு சத்தமும், துப் ...க்கி வேட்டும், கரும்புகையும், கார ...ன நெடியும், பிணக்குவியலும், ...த்தப் பெருக்கும் உள்ள பயங்கர ...பார்க்களமாகவும், இன்னும் சில ...மயங்களில் கை தட்டுதல்களும், ...ண்டல் சிரிப்புகளும் உள்ள வேடிக் ...கச் சொற்போர்களமாகவும் இருக் ...றது. பாக்கியத்தின் மனமும் அப் ...டித்தான் மாறி மாறி வேலை செய் ...து.

...நினைவுப் பள்ளியில் எண்ணங்க ...ளும் மாணவர்கள் எழுதும் தேர் ...த் தாள்களை மனச்சாட்சி ஆசிரி ...ன் திருத்துகிறான், பாக்கியத்தின் ...னத்திலும் அப்படிப்பட்ட தேர்வு ...ந்து கொண்டிருந்தது. இன்னும் ...ஸல்ட்' வெளிவரவில்லை.

இளம் பருவத்திலே இணைந்தி ...ந்து பிறகு படிப்பிற்காகப் பிரிந்து ...சன்றுவிட்டான். இப்போது ...ம். ஏ. பட்டம் வாங்கப் போகிறான் ...ல்லூரியில் இருந்த இத்தனை ஆண் ...களாக அவளைப்பற்றிநினைவெழுந்த ...க காட்டிக்கொள்ளவில்லை. ...ரண்டொரு முறை பார்த்தான். ...பசக்கூடவில்லை. அவளுக்கு மட் ...ம் பேசவேண்டும் என்று கோடி ...ஆசை.........ஆனால் அவன் 'பிகுவு ...ன்' போய்விட்டான். இப்பொழுது ...லுவில் வருவதாகக் கடிதம் எழுதி ...ருக்கிறான், பாக்கியத்தைப் பார்க்க ...வண்டுமென்று வருகிறான்.

...சேரன் பாக்கியத்தை நாடி வருகி ...ன்? அவன் பிணியாளனல்ல, நர் ...க நடிக்க! நண்பனாக இருந்தாலும் ...ளமை வழியும் ஒரு நங்கையைப் ...ார்க்க வலுவில் வருகிறான் என்றால் ...ள் எண்ணம் ஏதாவது இருக்க ...வண்டும். காதலடி கற்கண்டே... ...ன்று நிச்சயமாக அவன் சொல்லப் ...பாகிறான். காதல்......அந்த மோக ...மான மூன்றெழுத்துக்களால் எத் ...தனை சோகக் கதைகள் எத்தனைத் ...தால்வி அத்தியாயங்கள், எவ்வளவு ...பிரிவுப் பாடல்கள், பிரிவுகாண்டங் கள்.........உலகில் கணக்கிலடங்கா!

அதைச்சொல்லவே வரட்டுமே; உடனே பணிந்துவிடலாமா? பெண்மையின் தன்மை பொசுங்கிவிடாதா? அவளுக்கு மட்டும் அவன் மீது விருப்பமில்லையா? உறுதியாக உண்டு. அதற்காக வந்து நுழைவதற்குள் பகட்டான புடவையைக் கட்டிக் கொண்டு, பகல் வேஷம்போல 'பவுடரை' அடித்துக்கொண்டு பல்லிளித்துக்கொண்டு வாரும், என் கண்ணாளரே, வந்தெனக்கொரு முத்தந் தாரும் என்நேசக் காதலரே ...... பாடவேண்டுமா?

என்ன இருந்தாலும் காதல் உள்ளத்துடன் வரும் அவனை வாட்டலாமா? அவன் மனம் உடைந்து விட்டால்......காதல் கண்டனமாக மாறி விட்டால்......? அவன், படிப்பால் அகம்பாவம் பிடித்துக்கொண்ட ஒரு கர்வி என்று கருதிவிட்டால்......பதவியால் பண்பிழந்த தசைப் பிண்டம் என்று முடிவு கட்டிவிட்டால்...அல்லது பண்டை நாள் வெறுப்பைத் திருப்பி கக்குவதாகஎண்ணி வருந்தி திரும்பிவிட்டால்......ஒரு நாளும் இவைகளெல்லாம் நடக்கவே கூடாது.

பெண் சிரித்தால் போச்சு...புகையிலையை விரித்தால்போச்சு......என்பார்கள். என்ன போய்விடும்! தரமும், காரமும் மறைந்துவிடும்.

சிதம்பர இரகசியம் என்று ஒரு வெளியைக் காட்ட ஐந்து வெள்ளிப் பணங்கள் வாங்குகிறார்களாம் கோயிலில்! அவ்வளவுதான் அதற்கு மதிப்பு போலும்! ஒரு பெண்ணின் சிரிப்பிற்காக பல மண்டலங்களை மண்மேடான நிகழ்ச்சிகள் ஏராளம் உண்டு. ஆகவேதான் சேரனை சோரவிட்டுச் சிரிக்க வேண்டும். அவன் களிப்படைகிறபொழுது தட்டிவிட வேண்டும். தாபத்தால் துடிக்கவிட்டுச் சிரிக்கவேண்டும். அவனது பருவத் துடிப்பைக்கண்டு களிக்கவேண்டும். அவன் கெஞ்சக் கெஞ்ச....... அவள் தூரவிலகிக் கொண்டு போக வேண்டும். அவன் வெறுப்படைகிற நேரத்தில் நம்பிக்கையூட்டுகிற மாதிரியில் நடந்து கொள்ளவேண்டும்...

பாக்கியம் இப்படி பலபட எண்ணிக்கொண்டிருந்தாள். அவளையுமறியாமல் சிரித்துக்கொண்டாள் இடையிடையே......! இந்நிலைத் 'திருக்கூத்தையும்' கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் தங்கம்மா.

அவள் அம்மாவுக்குப் பித்து, கித்து பிடித்து விட்டதோ என்று அச்சப்பட்டாள். அவள் அனுபவக் களஞ்சியம்......ஆசை மணாளன் எவனோ தன் மனதில் பட்டதை அட்டையிலே கிறுக்கியனுப்பிவிட்டான் என்பதைப் புரிந்துகொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை.

"அம்மா......"

"என்ன தங்கம்......?"

"ஏன் இப்படி பூரித்துப்போறீங்க எனக்குச் சொல்லக் கூடாதா? அத்தை மகன் வருவதாக எழுதியிருக்கிறாரா......"

என்று சிரித்தாள்.

அவள் தலை தாழ்ந்தது. நாணத்தால் பெண்மையின் முழுப் பொலிவும் அவளது முகத்தில் தோன்றி நிறைந்தது!

"அப்படியெல்லாம்ஒன்றுமில்லை... ஒரு நண்பன் வருவதாக எழுதியிருக்கிறார். எப்பொழுது என்று கூட குறிக்கவில்லை"'

"கார்டு போட வீடு தெரிந்தவருக்கு நேரில் வரவா வீடு தெரியாது ......வரட்டுமேம்மா!"

தங்கம்மா இரவு சமையல் செய்ய 'களதர்பார்' இடத்திற்குச் சென்று விட்டாள். பாக்கியம் சாய்வுநாற்காலியில் சாய்ந்தபடியே வானத்தைப் பார்த்தாள்.

(தொடரும்)

காஞ்சீபுரம் பண்ட்ஸ் லிட்.,
(ஸ்தாபிதம் 1939)
காஞ்சிபுரம்

✻

புதுமுறை சேமிப்பு திட்டம்

முதலிலேயே பணம்பெறும் வாய்ப்பு!
கட்டியதொகையைப் போல
இரட்டிப்புப் பலன்!
தக்கவட்டி! அரிய சந்தர்ப்பம்!!
விபரங்கட்கு எழுதவும்
K. R. சாரி B. A.,
காரியதரிசி.

✻ படிப்பகம் ✻

உல்லாச ஓடம்

ஆசிரியர், பி. வி. லிங்கம்

திராவிடரியக்கப் பாதையில் திரண்டோன எழுந்தடித்த சூறாவளி மக்கள் இதயத்தில் விருந்து, கண்ணீர்த் துளிகளைச் சொரியச் செய்தது. துளிகளால் நிரம்பிய துயரக் கடலில் இருவர் செலுத்துகின்றனர் உல்லாச ஓடம்...... என்ற எண்ணம் கொண்டது இந்நூல்.

விலை அணா 0—4—0.

பெறும் இடம்:—

அழகிரிசாமி நூல்நிலையம்
82, காரைக்காட்டுத் தெரு,
திருவாரூர்.

* • *

இக்பாலும் சமுதாயமும்

ஆசிரியர்:– ர. பா. மு. கனி.

மனித சமுதாயத்தின் முன்னேற்றம் குறித்து கவிஞர் இக்பால் உள்ளங்கொண்டிருந்த ஆசைகளை, அழகாகத் தந்துள்ளார் ஆசிரியர்.

விலை 0—3—0.

பெறும் இடம்:—

இக்பால் வாசக மன்றம்,
கூத்தாநல்லூர்.

• • *

வாழமுடியாதவர்கள்

ஆசிரியர்: மு. கருணாநிதி.

கேலி, கிண்டல், சோகம், வீரம் அத்தனையும் குழைத்தோடும் தனது அழகிய நடையில், சமுதாயத்தில் திரியும் வாழ முடியாதவர்களைப் படம் பிடித்துள்ளார் மு. க! ஆறு கதைகள் — அத்தனையும் சிந்தனை விருந்து.

விலை 0—12—0.

பெறும் இடம்:—

முன்னேற்றப்பண்ணை,
2/122, பிராட்வே, சென்னை.

* * *

அவதூறு வழக்கு

ஆசிரியர்: கே. எ. மதியழகன்,

பத்திரிகை அச்சடிப்பவன் மீது ஒரு வழக்கு —கவர்னர் லஞ்சம் வாங்கியதாகப் பிரசுரித்தான் என்பது குற்றச்சாட்டு! அந்த ஏழை எழுத்தாளன் கொடுமைக்கு ஆளானான். இங்கு நடப்பதல்ல நிகழ்ச்சி; அமெரிக்காவில் நடந்த சம்பவம் ஒன்றை, தந்துள்ளார், அழகாக நல்ல முயற்சி.

0—3—0

பெறும் இடம்:—

முன்னேற்றப்பண்ணை,
பிராட்வே: சென்னை

* X *

NATIONAL CALL

ஆசிரியர்:- எம். ஜி. லட்சமணதாஸ்.

நமதியக்கக் கொள்கைகளைத், தாங்கி அலைகளைப் பரப்புவோக்குடன், வெளிவரும் ஆங்கில வார இதழ், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கென ஆங்கிலப் பத்திரிகையில்லையே என்ற குறையை நிவர்த்தி செய்கிறது நல்ல முறையில், சிறந்த வகையில் ஒவ்வொரு இதழையும் கொணரும் நிர்வாகிகள் பாராட்டு குரியவர்கள். ஆங்கில இதழ் நடத்துவது, அவ்வளவு எளிதானதல்ல; எனினும் கழகத்தின் மீதுள்ள ஆர்வம் அவர்களை முயற்சிப் பாதையில் கொண்டு வந்து விட்டுள்ளது. படித்த நமதியக்கத்தவர், குறிப்பாக மாணவமணிகள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய இதழ்.

முகவரி:-

"National Call"
15, குப்பைய செட்டி தெரு
சென்னை 17.

* • •

சேவைமணி

ஆசிரியர்: சேவைநேசன்.

இலங்கையிலிருந்து, திராவிட முன்னேற்றக்கழக எண்ணங்களை எதிரொலித்துக்கொண்டுவரும் தேசியமாத வெளியீடு. நல்லகட்டுரைகள், கதைகள், வரலாறுகள் மலரில் மணம் தருகின்றன. சே[illegible]யின் ஓசை, ஓங்கட்டும்!

விலை 60[illegible]

முகவரி:—

சேவைம[illegible]
காரியாலயம், வெள்ள[illegible]
Chinnabay, C[illegible]

X X X

சினிமா ஒழி[illegible]

ஆசிரியர்:— சேரன்

பணம் ஒன்றையே குறி[illegible]க்கொண்டு, மக்களிடை மூ[illegible] கையையும் மோக வெ[illegible] எழுப்பிவிடும் பட முதல[illegible] மனதில் வைத்து இந்நூல் [illegible]பட்டிருக்கிறது.

விலை அ[illegible]

பெறும் இடம்:— கலைப்பண்[illegible]
ஜூனா ரோடு சென்னை

• *

சாவுதிரா கல்[illegible]
ஆண்டு ம[illegible]

கொழும்பு. சாஹிரா கல்[illegible] ஆண்டுமலர் வரப்பெற்[illegible] மியப் பண்பாடு, கலைவள[illegible] தாய முன்னேற்றம் குறித்[illegible]வர்கள், ஆசிரியர்கள் முத[illegible] எழுத்தோவியங்கள் [illegible]ளன. இலங்கை வாழ் ம[illegible]களின் வாழ்க்கையை [illegible] உதவுகிறது.

X X

வரப்பெற்றே[illegible]

வெள்ளையனே வெ[illegible]
(இராமபத்திரன்) விலை 0[illegible]

பெறும் இட[illegible]:—

39, மார்க்[illegible]
திருமலைராயன்[illegible]

1 காதலர்கள் வாழ்க்கையி[illegible] எதற்காக?

2 கணவன் மனைவியிடம் [illegible] உண்டா?

(முல்லைக் கொடி[illegible]
பிரதி ஒன்று 0-3-[illegible]

பெறும் இடம்:—
மோகன் கம்பெ[illegible]
43 லிங்கி செ[illegible]
சென்னை.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press
95, Tirukkachinambi Street, Kancheepuram,